Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily தேசிய தினசரி

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 20 ஆம் நாள் றம்ழான் பிறை 6 (2-2-63) தபாற் பெட்டி என் 49 சனிக்கிழமை 352

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்ட ஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழ்ப்பாணம்

# இரண்டு எதிரிகளும் - குற்றவாளிகள்!

## நாகநாதன் வழக்கில் நீதிபதி அறிவிப்பு 15-ந் திகதி தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துள்வைத்து தம்மைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டி உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களான பெரேரா, பிலப்பிட்டியா ஆகியோர் மீது நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் தொடர்ந்த வழக்கை விசாரணைசெய்த யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. ஓ. எல். எம். கிரட்ஸர் எதிரிகளிருவரையும் குற்றவாளிகளாகக் கண்டுள்ளார். தண்டனையும் குற்றவாளிகளென்பதற்கான காரணங்களையும் இம்மாதம் 15-ந் திகதி தெரிவிப்பதாக நீதிபதி கிரட்ஸர் அறிவித்தார்.

நேற்றுக்காலை நீதிமன்றம் கூடியபோது வழக்கின் முடிவைத் தெரிந்துகொள்வதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பெருந்திரளானோர் திரண்டிருந்தனர்.

நீதிமன்றம் கூடியதும் நீதிபதி கிரட்ஸர் தாம் எதிரிகளிருவரையும் குற்றவாளிகளாகக் கண்டுள்ளதாகத் தெரிவித்து இம்மாதம் 15-ந் திகதி தீர்ப்பளிப்பதாகத் தெரிவித்தார்.

இவ்வழக்கில் முதல் எதிரி பெரேராவின் சார்பில் வழக்கறிஞர் ஏட்லிபெரேராவும் இரண்டாவது எதிரி பிலப்பிட்டியாவின் சார்பில் வழக்கறிஞர் டி. கணேசலிங்கமும் புரக்டர் திரு. நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார்கள். டாக்டர் நாகநாதனின் சார்பில், வழக்கறிஞர் ஏ. ஸி. எம். அமீர், திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடன் திருவாளர்கள் எஸ். நடராசா, ஏ. சொக்கலிங்கம் ஆகியோரின் அனுசாரணையுடன் ஆஜரானர்.

### நாகநாதன் பேச்சு

நீதிமன்றத்திலிருந்து வாடி வீட்டுக்குச் சென்ற டாக்டர் நாகநாதன் அங்கு தமது ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் "இந்த வழக்கின் வெற்றி தமது வெற்றியல்ல வென்றும் தமிழ் பேசும் மக்களின் வெற்றியென்றும் இதனால் தமிழ் பேசும் மக்களுக்கு புது உற்சாகமும் நம்பிக்கையும் ஏற்படுமென்றும் கூறினர்.

"நீதிமன்றம் இருக்கும்வரை எந்த அநீதிக்கும் அடக்குமுறைக்கும் அஞ்சாது அறப்போரில் ஈடுபடலாம்" என்று டாக்டர் நாகநாதன் கூறினர்.

'பொலிஸ் நிலையச் சம்பவம் பற்றித் தவறான அறிக்கை வெளியிட்ட சிறிமா அரசாசமும் குற்றவாளிதான்' என்றும் டாக்டர் நாகநாதன் கூறினர்.

## மாநகரசபையில் கறுப்புக்கொடி

### 13 அங்கத்தவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

மாநகரசபைக் கட்டடத்திலும் மாநகரசபையின் இதர கட்டடங்களிலும் இலங்கை சுதந்திரமடைந்த பெப்ரவரி 4-ந் திகதியான திங்கட்கிழமை கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கதினம் அனுஷ்டிக்க வேண்டுமென யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர்கள் பதின்மூன்று பேர் மாநகரசபை மேயருக்கு கையொப்பமிட்டு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் கேட்டுள்ளனர்.

இலங்கையில் தமிழ்ப் பேசும் மக்கள் பூரணசுதந்திரம் பெறும் வரை தமிழ்ப் பிரதேசங்களில் சுதந்திரதினத்தை துக்கதினமாக அனுஷ்டித்துவர வேண்டுமென்றும் இதற்கேற்ப இம்முறையும் மாநகரசபைக் கட்டிடங்களில் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு தமிழ்ப் பேசும் மக்களின் கவலையைத் தெரிவிக்க வேண்டுமென்றும் 13 அங்கத்தவர்களும் கோரியுள்ளனர்.

## கறுப்புக்கொடி கட்ட திருமலையும் தீர்மானம்

திருமலை, வெள்ளி

"பெப்ரவரி 4-ம் திகதி இலங்கை சுதந்திரமடைந்த திருமாகும், தமிழ்ப் பேசும் மக்களைப்பொறுத்தவரையில் அவர்கள் இந்த நாட்டின் இரண்டாந்தர பிரஜைகளாகவே கருதப் பட்டு வருகின்றார்கள். எனவே தமிழ் பேசும் மக்கள் இத்தினத்தை துக்கதினமாகக் கருதி துக்கம் அனுஷ்டிக்கின்றார்கள். இத்தினத்தில் திருக்கோணமலை நகராண்மைக்கழகமும் முன்போல் தனது கழகப் மணிமணையில் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்டு, இந்நகரின் பொதுமக்களுடன் சேர்ந்து ஆட்சியாளர்களுக்கு இதயக் குமுறலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது." என்று கூறும் பிரேரணையொன்று திருக்கோணமலை நகராண்மைக் கழகத்தின் ஜனவரிமாதத்திய கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு நகராண்மைக்கழகத் தலைவர் திரு. சி. சிவானந்தன் தலைமைவகித்தார்.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெற்ற கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தின் போது நடைபெற்ற தாக்குதல் பற்றி ஒரு பகிரங்க விசாரணை நடத்த வேண்டுமென்று இக்கழகம் பிரதமரை கேட்டுகொள்ளும். பிரேரணையொன்றும் நிறைவேறியது. தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரும் இலக்கியமேதையுமான திரு ப. ஜீவானந்தத்தின் மரணத்துக்கும் அனுதாபம் தெரிவிக்குந்தீர்மானமொன்றும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

'சிறிமாவோபுர' சம்பந்தமாக திருமலை மாகாண அதிபருக்கு எழுதிய கடிதத்திற்கு கிடைத்த பதில் என்ன? என திரு. இ. சோமசுந்தரம் கேட்ட கேள்வியொன்றிற்கு கழகத் தலைவர் பதிலளிக்கையில் நகரத்தில் எந்தப் பகுதிக்கும் பெயர் சூட்ட நகராண்மைக் கழகத்திற்கே தவிர வெறெவருக்கும் உரிமைகிடையாது என்று அரசாங்க அதிபர் பதில் அனுப்பியுள்ளதாகக் கூறினர்.

## "சலுகைகள் பெற்று வாழ்வது நிலைக்காது உரிமைப்போராட்டத்துக்கு தயாராகவேண்டும்"

### திரு. இராசமாணிக்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

"அரசியல் உரிமை மறுக்கப்பட்ட எந்தச் சமூகமாவது அந்த உரிமைகளை இலகுவாகப் பெற்றதனை சரித்திரத்தில் காணமுடியாது. தியாகங்களைச்செய்து பல ஆண்டுகள் போராட்டங்களை நடத்தி அநேக நாடுகளும், சமூகங்களும் தமது உரிமைகளைப்பெற்ற உண்மையையே சரித்திரத்தில் காணமுடியும். எனவே மீண்டும் நாம் பல தியாகங்களைச் செய்து எமது உரிமைகளைப் பெற திடசக்தியோடு தயாராகவேண்டும். அற்ப சலுகைகளைப்பெற்று வாழும் வாழ்க்கை ஒருசில காலத்துக் குப் பயனளிக்கக்கூடும் ஆனல் நிரந்தர பலனை அளிக்க முடியாது."

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம்.பி.யுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார் அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஒரு நாடு அல்லது ஒரு சமூகம் சுதந்திரம்பெற்றதெனக் கூறப்படும் போது அதிலொரு சிலகருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. அன்னிய ஆட்சியில் இருக்கும் ஒருநாடு சுயாட்சி பெறும்போது தன்னைத்தானே ஆளும் தன்மையைப் பெறுகின்றது. அதே போன்று ஒரு சமூகம், இன்னுமொரு சமூகத்தின் ஆதிக்கத்திலிருந்து மீட்சி பெறுவதால் மீட்சிபெறும் சமூகம் அவ்வாட்சி நிர்வாகத்தில் முழு நிர்வாகத்திலும் பங்குகொள்வதாகும். இதனைத் தான நாம் சுதந்திரம் என சாதாரணமாகக் கருதுவோம். 1948-ல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நாட்டின் நிர்வாகம் நாட்டு மக்களிடையே ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படினும் உண்மையில் பெரும்பான்மையான ஒரு சமூகத்தினரின் கையில் மட்டும் ஒப்படைக்கப்பட்டது. எனவ

(5-ம் பக்கம் பார்க்க)

## சீனவுடன் சுபந்திரியோ தொடர்பு கொண்டுள்ளார்

### கொழும்பு யோசனையை ஏற்கச்செய்ய முயற்சி

புதுடில்லி, பெப். 1

இந்திய-சீன எல்லைப் பிரச்னைகளுக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கென கொழும்பு மகாநாடுகள் தெரிவித்த யோசனையை சீனவும் அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்வதற்காக சீனவுடன் தாம் தொடர்பு கொண்டுள்ளதாக இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ இன்று நிருபர்கள் மகாநாட்டில் கூறினர்.

கொழும்பு மகாநாட்டு யோசனைகள் சம்பந்தமாகச் சீன மேலும் சில விளக்கங்களைத் தெரிவித்துள்ளதாகவும் இது இரு நாடுகளுக்குமிடையிலுள்ள விளக்கங்களின் இடைவெளியைக் குறைத்துள்ளதாகவும் டாக்டர் சுபந்திரியோ கூறினர்.

சீனவைத் திருப்திப்படுத்துவதற்காக கொழும்பு யோசனையில் மாறுதல் செய்யக் கூடாதென்று பிரதமர் நேரு தம்மிடம் கூறியதாகவும் டாக்டர் சுபந்திரியோ தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### திருமணம்

எமது சிரேஷ்ட புத்திரி செல்வி சிதம்பரராணி அவர்கட்கும் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களின் கனிஷ்ட புத்திரன் செல்வன் தெய்வேந்திரன் அவர்கட்கும் தை மீ 21ம் திகதி (3-2-63) ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் 10-00 மணி வரையில் வரும் சுபமுகூர்த்தத்தில் திருவருள் துணைகொண்டு திருமணஞ்செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் நண்பரையும் உறவினரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
முத்துக்குமாரு நவரத்தின ராசாவும் (கிராமத் தலைவர்) பாரியாரும்.

கமலபதி,
மண்டைதிவு.

683

### திருமண அழைப்பிதழ்

**சோதிநாதசர்மா-இராஜதாம்பாள்**

புன்னாலைக்கட்டுவன் திரு. ப. குகானந்த சர்மா அவர்களின் புத்திரன் திருநிறைச் செல்வன் சோதிநாத சர்மாவுக்கும் (சௌக்கியப்பகுதி, கொழும்பு) மூளாய் திரு. சிவவைத்தீஸ்வரசர்மா அவர்களின் கனிஷ்ட புத்திரி திருநிறைச்செல்வி இராஜதாம்பாளுக்கும் தைத்திங்கள் 21-ம் நாள் (3-2-63) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

உறவினர்களும், அன்பர்களும் இதையே அழைப்பிதழாகக் கொள்ளவும். 685

### திருமண அழைப்பு

**பொன்னம்பலம்—இலட்சுமிதேவி**

நீர்வேலியைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் திரு. கனகசபாபதி சுப்பையா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் யாழ்ப்பாணம் விரகேசரிக்கிளை திரு.எஸ்.நடராசாவின் சகோதரரும் யாழ்ப்பாணம் தபால் பகுதியைச் சேர்ந்த பொன்னம்பலம் அவர்களுக்கும் நீர்வேலியைச் சேர்ந்த திரு. அப்பாக்குட்டி சிதம்பரம் தம்பதிகளின் புத்திரி இலட்சுமிதேவி அவர்களுக்கும் 1963 பெப்பிரவரி 4-ம் திகதி காலை 7-12—7-51 மணியளவில் வரும் முகூர்த்தத்தில் மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள் திருமணவிழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். அழைப்பிதழ்கள் தனித்தனியாக அனுப்பப்படவில்லை.

க. சுப்பையா.
நீர்வேலி. 684

### திருமணம்

நேற்று 'ஈழநாடு' பத்திரிகையில், மகாலிங்கம் இராசலட்சுமி திருமண அழைப்பு விளம்பரத்தில் கலாநிதி வ. கணேசலிங்கம், மணமகனின் சகோதரர் என்று இருக்க வேண்டும்.

### விற்பனைக்கு

30 கோழிகள் வளர்க்கக்கூடிய நவீன வசதிகளையுடைய Deep-litter கூடு குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. இல. 60, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

682

### வீடு வாடகைக்கு

யோகவனம், கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு. சகல வசதி (மின்சாரம், குளாய்த்தண்ணீர்) கொண்டது. விபரங்கட்கு மு. சின்னையா, திருநெல்வேலி கிழக்கு அல்லது பொன்னுத்துரை பத்தர், கொக்குவில் கிழக்கு.

679

ஆசிரியருக்குக் கடிதம்

# இதுதான்தேசியகல்வித்திட்டமா?

"நாட்டுக்கேற்ற கல்வித்திட்டம் வகுப்போம்," என்று கூறிப் பாடசாலைகளைப் பொறுப்பேற்றது அரசாங்கம்! 'மேலைநாட்டுக் கல்விமுறைகளை அறிந்து வருகிறேன்' என்றுகூறி அமைச்சர் சுற்றுலா நடத்தினர்! காத்திருந்தோம், வெறுங்கையோடு இலங்கை வந்தார்! அறிஞர் பெருமக்களைக்கொண்டு ஆணைக்குழு அமைத்தார்! அதன் பாரபக்கமான முடிவுகளைக் கண்டு திடுக்கிட்டோம்.

"தனிப்பட்ட முகாமையாளரின் இன்னல்களிலிருந்து தப்பிவிட்டோம்" என ஆசிரியர்கள் மனப்பால் குடித்தார்கள்! சட்டியிலிருந்து அடுப்பில்விழுந்த கதையாகிவிட்டது! மாற்றம் எப்போது வருமோ என்று அஞ்சி அஞ்சிக்கிடக்கும் நிலைக்கு வந்துவிட்டனர்! அரசியலுரிமையை இழந்துவிட்டனர்! எவ்வித கட்டுப்பாடும் இன்றி குடியியல், வரலாறு முதலிய பாடங்களைப் படிப்பிக்கமுடியாது தவிக்கின்றனர்! இதுதான் தேசியக் கல்விபோலும்!

புகையிரத இலவசச் சீட்டும் வாடகைப்படியும் கிடைத்தது! பலியிடப்படும் ஆடு தன் கழுத்திலுள்ள மாலையின் தளிர்களைச் சுவைப்பதுபோல இதனை அனுபவித்தனர்! அவர்கள் மகிழ்ச்சி நீர்க்குமிழியாயிற்று. சம்பளப்படியேற்றம் தடைப்பட்டது! தேசியக் கல்வி முறையை நடைமுறைக்குக் கொண்டுவரத் தமிழ் ஆசிரியர்கள் சிங்களம் பயிலவேண்டுமாம்!

கல்வியமைச்சரை மாலையிட்டு வரவேற்றது வடபகுதி! தமிழாசிரியர்கள் சிங்களம் பயில வேண்டுவதில்லை என வரவேற்பு மகிழ்ச்சியில் வாக்குறுதி அளித்தார்! மற்றைய அமைச்சர்களின் வாக்குறுதிகளைப்போல, இதுவும் காற்றில் பறந்துவிட்டதுபோலும்!

ஆசிரியர்களுக்குச் சம்பளப் படியேற்றம் இல்லை! மாணவர்களுக்குக் கல்லூரிகளில் இடமில்லை! பயிற்சிக் கல்லூரிகள் மூடப்படுகின்றன! இணைப்புத்திட்டம் என்ற போர்வையில் தமிழ்ப் பகுதிகள் மூடப்பெற்றுத் தமிழ்மாணவர்களுக்குக் கல்விவசதிகள் மறுக்கப்படுகின்றன! பாடசாலைக் கட்டிடங்களும் தளபாடங்களும் சீரான நிலையில் இல்லை! இன்னபிறவற்றைத்தான் ஆட்சியாளர் தேசியக் கல்வித் திட்டமெனக் கருதுகிறார்களா?

சி. குமாராம்பிகை
சங்கானை.

### யானை ஓட்டம்

கண்டி, வெள்ளி

4-ம் திகதி போகம்பரையில் நடைபெறவிருக்கும் சுதந்திர தின நிகழ்ச்சிகளில் யானை ஓட்டமும் இடம் பெற்றுள்ளது.

### அரசாங்க கேள்விப்பத்திரங்கள் நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 219-கீழ்மாகாணம், செங்கலடி உபபிரிவில் முள்ளாமுனை அணைக்கட்டிற்கான கேள்விப் பத்திரங்கள் 5-3-63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

என் 220-செங்கலடி உபபிரிவில் சோழன் க்ட்டுக்குளம் திருத்தவேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 5-3-63வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதன்முழுவிபரங்களுக்கும் 1-2-63 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1ம் பகுதி, 2ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### வயதடைந்தோர் ஓய்வு பெற உத்தரவு

கொழும்பு, வெள்ளி

வித்தியோதய பல்கலைக் கழகத்தில் வேலை பார்த்து வந்த வயதடைந்த நாலு குமாஸ்தாக்களுக்கு வெளியேற்ற அறிவிப்பு தரப்பட்டுள்ளது. 60 வயதை எட்டிவிட்ட குமாஸ்தாக்கள் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே சேவையிலிருக்க அனுமதிக்கப்படுவர் என ஒரு சுற்றறிக்கையும் இவர்களது வெளியேற்ற அறிவிப்புடன் கூட அனுப்பப்பட்டுள்ளது.

வித்தியோதய பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கோ மற்றும் உத்தியோகத்தர்களுக்கோ இப்படியான வெளியேற்ற நிர்ப்பந்தமோ அதற்கான காலதவணையோ விதிக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களில் 63 வயதைத் தாண்டியவர்கள் கூட பலர் உள்ளனர்.

### ஆசிரியர் இல்லை

வேலணை, வெள்ளி

வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலையில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி நாகம்மா தேவராசா ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுச்சென்று விட்டதால் மேற்படி பாடசாலையில் இது வரை ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் எவரும் நியமிக்கப்படவில்லையெனத் தெரிகிறது. பாடசாலைக்கு உடனடியாக ஆங்கில ஆசிரியர் ஒருவரை நியமிப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு பெற்றோரும் பாரதி இளைஞர் கழகத்தினரும் சம்பந்தப்பட்டவர்களை வேண்டியுள்ளனர்.

**ஈழநாடு**

**3-2-63**

**வாரப் பதிப்பில்...**

'சுவீப்'
(சிறுகதை)
அங்கையன

கப்பலில் கொழும்பிலிருந்து லண்டனுக்கு
டி. பி. எச். சுவாமிநாதன்

குறுநாவல்
யோ. பெனடிக்ற்பாலன்

பூஜ்யப்தபால்
ஆர் ஜி. சேனநாயக்கா அவர்களுக்கு

உலக மேடையில் அணுத் தடைப் பேச்சுக்கள்
டி. எம். எம்.

கலை அரங்கம்

மற்றும் பல சுவையான அம்சங்கள்

# வெளிநாட்டு காய்கறி

## நல்லபடியாகஇனிமேல்கிடைக்காது

கொழும்பு, வெள்ளி

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் காய்கறிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் வெளி நாடுகளிலிருந்து நாட்படாத காய்கறி இனிமேல் நமக்குக் கிடைக்காது.

நாட்டுக்குத் தேவையான காய்கறிவகைகள் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படுவதாகவும் வெளிநாட்டிலிருந்து காய்கறிகளை இறக்குமதிசெய்வதில் பெருந்தொகையாக வெளிநாட்டுச் செலாவணி ஏற்படுவதாகவும் இதனாலேயே காய்கறிகளுக்கு இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தக அமைச்சுத் தெரிவிக்கின்றது.

சென்றபல ஆண்டுகளாக இங்கிலாந்து, இந்தியா, ஆஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து காய்கறிகள் இறக்குமதிசெய்யப்பட்டு வந்தது. இதனால் பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அண்மைக் காலங்களில் இறக்குமதி குறைந்துவந்துள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. இப்பொழுது இறக்குமதிசெய்யப்படும் காய்கறிகளுக்கு அந்தருக்கு 2 ரூபா முதல் 6 ரூபாவரை தீர்வை அறவிடப்படுவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு காய் கறிகள், கொழும்பிலும் வெளியூர்களிலும் விநியோகம்செய்வது பற்றியும், உற்பத்தியாளர்களுக்கு நியாயமாக விலை கொடுப்பது, காய்கறிகளை பழுதடையாமல் பாதுகாத்து வைப்பது தரத்திற்கேற்ற முறையில் அவற்றைப் பெட்டிகளில் அடைத்து விநியோகம்செய்வது பற்றியும் வர்த்தக அமைச்சு இதுபற்றிய மகாநாடு ஒன்றின் போது ஆலோசித்தது.

### ஜினதாசா கமிட்டி விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கும்

கொழும்பு, வெள்ளி

நிர்வாக இணைப்புச் சேவையைப் பற்றி ஆராய்ந்து வந்த கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எச். ஜினதாசா தலைமையிலான கமிட்டி தனது அறிக்கையை விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும் எனத் தெரியவருகிறது.

சிவில் சேவையை ஒழிப்பதென்று பொதுவாகத் தீர்மானித்த அரசாங்கம் திரு. ஜினதாசா தலைமையிலுள்ள அரசாங்க அதிகாரிகள் கமிட்டியின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. சிவில் சேவையை ஒழித்து அதற்குப் பதிலக் நிர்வாக இணைப்புச் சேவை ஒன்றை நிறுவுவதால் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளிலிருந்தும் ஜினதாசா கமிட்டி அபிப்பிராயம் கேட்டிருக்கிறது.

### ரயில் நேரம்

| யாழ்ப்பாணம் | | கோட்டை | |
|---|---|---|---|
| காலை | 5-40+ | பி. ப. | 1-20 |
| காலை | 7-25 | மாலை | 7-15 |
| பி. ப. | 2-26 | இரவு | 10-15 |
| மாலை | 6-36 | காலை | 5-15 |
| மாலை | 8-52* | காலை | 6-15 |
| **கோட்டை** | | **யாழ்ப்பாணம்** | |
| காலை | 6-00 | பி. ப. | 1-23 |
| காலை | 6-45 | மாலை | 5-55 |
| பி. ப. | 2-15 | இரவு | 9-52 |
| மாலை | 7-15 | காலை | 5-05 |

+ஞாயிறு இல்லை
*ஞாயிறு மட்டும்

### பண்டித வகுப்புகள்

யாழ்ப்பாணம், சனி

தமிழ் உயர்தர வகுப்புக்களாகிய பிரவேச, பாலபண்டித, பண்டித வகுப்புக்கள் வண்ணை நாவலர் பாடசாலையில் வருகிற வியாழக்கிழமை காலை ஆரம்பமாகி ஒவ்வொரு சனிஞாயிறும் விடுமுறைக் காலங்களிலும் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### "முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டும்"

வேலணை, வெள்ளி

"நம்மினம் தாழ்வுப் பாதையில் சென்றுகொண்டிருப்பதன் காரணம் பழம் பெருமையில் இன்பம்கண்டு கொண்டிருப்பதே. இதனால் உலக முன்னேற்றத்துடன் நாமும் முன்னேற முடியாதவர்களாகி பின் தங்கிவிட்டோம். இந்நிலை மாறவேண்டும். அதற்கு சனசமூக நிலையம் பொது சனசேவா சங்கங்கள் பெரிதும் முன்மாதிரியாக அமைய வேண்டும்."

இவ்வாறு புளியங்கூடல் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசிய பண்டிதர் நா. கந்தப்பு குறிப்பிட்டார். திரு. வை. வடிவேலு தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் ஆசிரியர்கள் திரு. பொ. பொன்னுச்சாமி, திரு. க. மயில்வாகனம், திரு. சி. இரத்தினம் ஆகியோரும் பேசினர்.

நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். காப்பாளர்:- திரு. வை. வடிவேலு. தலைவர்:- திரு. க. மயில்வாகனம் ஆசிரியர், துணைத்தலைவர்:- திரு. பே. பொன்னுச்சாமி ஆசிரியர், இணைச்செயலாளர்:- திரு. கா. பாலகிருஷ்ணன், திரு. க. பாலகணபதி. பொருளாளர்:- திரு. சு. விநாயகமூர்த்தி.

### ஆசிரியர் நிலைமைகளை விசாரிக்க

**புதிய அமைப்பு**

கொழும்பு, வெள்ளி

கல்வி டைரக்டர் முகாமையிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களது நியமனம், வேலை நீக்கம், இடமாற்றம் சம்பந்தமான சகல காரியங்களையும் பொறுப்பேற்றுக் கவனிக்கசுயமானதொரு நிர்வாகக் குழுவை நியமிப்பதென்று கல்வி அமைச்சர் தீர்மானித்துள்ளார். ஆசிரியர்களின் நியமனம், இடமாற்றம் சம்பந்தமாக ஒழுங்கீனம் பல இடம் பெற்றுவருகிறதென்ற குற்றச்சாட்டின் மீதே அமைச்சர் இவ்வாறு தீர்மானித்துள்ளார்.

அரசாங்க பொது சேவைக் கமிஷன், தலதாபன சேவைக் கமிஷன் மாதிரியாக இந்தக் குழு சுயமான தொன்றாக அமைக்கப்படும். கல்விப்பகுதியைச் சேர்ந்தவர்களும் கல்வி அனுபவங்களில் மேம்பட்டவர்களுமாக தெரிந்தெடுத்த பிரதிநிதிகள் இக் குழுவில் இடம் பெறுவர்.

### உருளைக்கிழங்கும் வெண்காயமும்

கொழும்பு, வெள்ளி

ஆயிரக்கணக்கான தொன் அளவில் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் உருளைக் கிழங்கு, பெரிய வெண்காயம் போன்ற பொருள்கள் அவற்றை இறக்குமதிசெய்யும் வர்த்தகர்களின் தாமதத்தினால் கொழும்புத் துறைமுகப் பண்டகசாலையில் பழுதடைந்துபோகும் நிலையில் உள்ளதாயும் இவற்றை காலாகாலத்தில் அப்புறப்படுத்தும்படி இறக்குமதியாளர்களை துறைமுக கூட்டுத்தாபனம் நிர்ப்பந்தித்தால்மட்டுமே இதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தைத் தவிர்க்கமுடியுமென்றும் துறைமுக வட்டாரத்தில் வேலை பார்க்கும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சீனாவை கொழும்பு நாடுகள் மறைமுகமாக கண்டிக்கின்றன?

## முன்னுக்குப் பின் முரணாக நடந்துகொள்வதே காரணம் சுகர்னோ-இலங்கைத்தூதர் சந்திப்பு

புதுடில்லி, பெப்ரவரி 1

கொழும்பு மகாநாட்டு யோசனைகளை இன்னும் ஏற்றுக்கொள்ளாமல் சீனா கூறும் காரணங்களுக்கு, கொழும்பு மகாநாட்டு அரசுகள் மறைமுகமான எதிர்ப்புக் காட்டி வருகின்றன என்றும் கொழும்பில் கூடிய ஆறு நாடுகள் தெரிவித்திருந்த யோசனைகளை இந்தியா ஏற்றுக்கொள்கிறதென அறிவிக்கப்பட்டதற்குப் பின்னர்தான் சீனா, கொழும்பு யோசனைகளைப் புறக்கணித்தது என்றும் அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

### முன்னுக்குப் பின் முரணாக...

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, பீக்கிங் சென்று, கொழும்பில் கூடிய ஆறு நாடுகள் தெரிவித்திருந்த யோசனைகளை சீன அரசாங்கத்துக்கு விளக்கமாக எடுத்துக்கூறியதும், இந்த யோசனைகளைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாக சீன அரசாங்கம் தெரிவித்திருந்ததென்றும், ஆனால் பீக்கிங்கிலிருந்து இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா புதுடில்லிக்கு வந்து, இந்திய அரசாங்கத்திடம் கொழும்பு யோசனைகளைத் தெரிவித்த பின்னர், தனது முடிவை சீனா மாற்றிக்கொண்டதென்றும் அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

### முடிவில்லாத சூழ்ச்சி

கொழும்பு மகாநாட்டு யோசனைகளை ஆதரிப்பதாகக் கூறி இப்போது அந்த யோசனைகளை ஏற்காமல் இருக்கும் சீனாவின் புதிய போக்கு என்னமாதிரியான கட்டத்தை உருவாக்குமென்று தெரியாதென்றும் சீனாவின் புதியபோக்கு, முடிவில்லாத ஒரு சூழ்ச்சியை அது வழிகோலுகிறது என்பதையே எடுத்துக்காட்டுகிறது என்றும் பாரத வெளிவிவகார இலாகாவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

### நேபாவில் சிவில் நிர்வாகம்

வடகிழக்கு எல்லைப்பகுதியில், சீனர்கள் வெளியேறிச் சென்ற இடங்களில் இரண்டு வார காலத்துக்குள் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுவிடுமென்று நேபா அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். வட கிழக்கு எல்லை ஏஜன்ஸியின் சில பகுதிகளில், அண்மையில் சீனர்கள் நடத்திய அழிவு, கொள்ளை விபரம்பற்றி பாரத அரசாங்கம் இப்பொழுது மதிப்பெடுத்திருக்கிறது. சேத மதிப்பீடு சுமார் இருபத்து ஆறரை லட்சம் ரூபாய் என்றும் பொம்டிலாவில் மாத்திரம் 25 லட்சம் ரூபாய்க்கு சேதமேற்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### படுக்கை விரிப்புகளையும் கொண்டுசென்றனர்

சுகாதார மந்திரி திருமதி சுசிலா நய்யார் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில், எல்லையின் கிழக்குப் பகுதியிலுள்ள ஆஸ்பத்திரிகளையெல்லாம் சீனர்கள் சேதப்படுத்தினரென்றும், இப்பகுதியிலுள்ள சுமார் ஐம்பது ஆஸ்பத்திரிகளில், படுக்கை விரிப்புகளையும் சீனர் கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றனரென்றும் கூறினர்.

### இரண்டாவது பட்டியல்

சீனர்களினால் சிறைப்பிடிக்கப்பட்ட பாரதக் கைதிகளின் இரண்டாவது பட்டியலை சீன செஞ்சிலுவைச் சங்கம் பாரத செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பியுள்ளது. இப்பட்டியலில், சீனர்களினால் கைதுசெய்யப்பட்ட 820 பாரதக் கைதிகளின் பெயர்கள் இருக்கின்றன. சீனர்களினால் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படும் 2156 இந்தியக் கைதிகளின் இரண்டாவது பட்டியலே இப்பொழுது பாரத செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கிடைத்துள்ளது.

### 'தவறான செய்தி'

நாகாலாந்தில் ஐந்து லட்சம் பாரதத் துருப்பினர் குவிக்கப்படுகின்றனர் என்று வெளிநாட்டுப் பத்திரிகையொன்று வெளியிட்டிருந்த செய்தியில் உண்மையெதுவுமில்லையென்று பாரத வெளிவிவகார இலாகாவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

### சிட்னியில் பாதுகாப்பு நிதி

பாரத தேசிய பாதுகாப்பு நிதிக்கு உதவும்பொருட்டு, ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில், பாதுகாப்பு நிதியொன்று ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

பாரதப் பிரதமர் திரு. நேருவுக்கு, ஆஸ்திரேலியா பிரதமர் திரு. மென்ஸிஸ் அனுப்பியுள்ள குடியரசு வாழ்த்துச் செய்தியில், தனது பிரதேச உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ளும் பாரதத்தின் போராட்டத்துக்கு, தனது நாடு நல்லாதரவு கொடுப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

### வர்த்தக பேச்சுகள்

புதுடில்லியில் நடைபெற்ற பாரத—இந்தோனேஷிய வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நேற்றுமாலை முடிவடைந்தது. நீண்டகால வர்த்தக ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வதென்று இரு நாடுகளும் கொள்கையளவில் ஒத்துக்கொண்டன. பருத்தி, சணல் ஆகியவற்றை இந்தோனேஷியாவுக்கு பாரதம் ஏற்றுமதி செய்வதுடன் ஆலை இயந்திரங்களையும் மருந்துவகைகளையும் இந்தோனேஷியாவுக்கு பாரதம் ஏற்றுமதி செய்யுமென்றும் பாரததுக்கு இந்தோனேஷியா, ரப்பர், இரும்பு அல்லாத உலோகங்களை அனுப்பிவைக்குமென்றும் தெரியவருகிறது.

### இலங்கை தூதர்—சுகர்னோ சந்திப்பு

இந்தோனேஷியாவில் இலங்கைத் தூதராகவிருக்கும் திரு. கனகசுந்தரம் நேற்று இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்னோவைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில், சீன—இந்திய பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில், இலங்கைத் தூதர் தெரிவிக்கையில், கொழும்பில் கூடிய ஆறுநாடுகளும் சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது பேச்சுவார்த்தைகள் நடத்தும் என்று கூறினர்.

### செக். தூதுகோஷ்டி

செக்கோஸ்லாவேக்கிய வர்த்தகத் தூதுகோஷ்டியொன்று நேற்று புதுடில்லி வந்துசேர்ந்தது.

புதுடில்லிக்கு விஜயம் செய்த அமெரிக்க வெளிவிவகார உதவி மந்திரி நேற்று புதுடில்லியிலிருந்து அமெரிக்கா பயணமானர்.

### 'ஜெட்' என்ஜின்

'ஜெட்' பயிற்சி விமானததுக்கான என்ஜின்கள், பங்களூரிலுள்ள ஹிந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் விரைவில் தயாரிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய துறைமுகம்

சென்னை துறைமுகத்தில் புதிய கப்பல் துறையொன்றை அமைக்க அரசாங்கம் முயற்சியெடுத்துவருகிறது.

## சோவியத் யூனியனுக்கே ஆதரவு அதிகம்

புதுடில்லி, பெப். 1

ஆபிரிக்க-ஆசிய நாடுகளின் ஆதரவைப் பெறுவதில் சோவியத் யூனியனும் சீனாவும் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன. உலகிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் பெரும்பாலானவை சோவியத் யூனியனையே ஆதரிக்கின்றன.

தங்கனிக்காவில் மோஷியில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க ஐக்கிய மகாநாடு சம்பந்தமாக அவதானிகளின் மதிப்பீட்டின்படி சோவியத் யூனியனையே உலகிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் பெரும்பாலானவை ஆதரிப்பதாகத் தெரிகிறது.

இந்தோனேஷியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மலாயா கம்யூனிஸ்ட் கட்சியும் சீனாவை ஆதரிப்பதாகவும் இந்தியா, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிகள் சோவியத் யூனியனை ஆதரிப்பதாகவும் தெரிகிறது. பர்மா கம்யூனிஸ்டுகளில் சீனாவையும் சோவியத்தையும் ஆதரிக்கும் இரு பிரிவுகள் உள்ளன. புதிதாக பர்மாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐக்கிய மார்க்ஸிஸ தொழிலாளர் கட்சி சோவியத் யூனியனை ஆதரிக்கிறது. ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி 'மதில் மேல் பூனை'யாக இருக்கிறது. வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியும் நடுநிலைமைவகிக்கிறது. மத்திய கிழக்கில் சீனாவுக்கு ஆதரவில்லை. ஐரோப்பாவில் அலபேனியாமட்டும் அதை ஆதரிக்கிறது.

---

## ஏவாயுத தளம் இன்னும் இருக்கிறது

வாஷிங்டன், பெப். 1

கியூபாவில் முன்னர் இருந்த நடுத்தர ஏவாயுத தளத்தை சோவியத் யூனியன் இப்பொழுதும் நிர்வகித்து வருகிறதென்றும், கியூபாவிலிருந்து ஏவாயுதங்களை அகற்ற ரஷ்யாவுக்கு விருப்பமில்லையென்றும் அமெரிக்க செனட்டர் ஒருவர் நேற்று அமெரிக்க செனட் சபையில் தெரிவித்துள்ளார்.

## கெயிட்ஸ்கலுக்கு இறுதி அஞ்சலி

லண்டன், பெப். 1

காலஞ்சென்ற பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர்கெயிட்ஸ்கலுக்கு பிரிட்டிஷ் மக்கள் நேற்றுத் தங்களது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்

கடந்த மாதம் 18-ந் திகதி காலமான திரு. கெயிட்ஸ்கலின் (56 வயது) மரணம் குறித்து நேற்று இங்குள்ள தேவாலயமொன்றில் ஆராதனை நடைபெற்றது. இந்த ஆராதனையில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் மாக்மில்லன் உட்பட 2,000 பேர் கலந்து கொண்டனர்.

---

## வாக்கெடுப்பு இரகசியம்

லண்டன், பெப். 1

காலமான திரு. கெயிட்ஸ்கலின் தொழிற் கட்சி தலைமைப் பதவிக்கு போட்டியிடும் அபேட்சகர்களின் பெயர்கள் இன்று வெளியாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற் கட்சியின் தலைமைப் பதவிக்கான வாக்கெடுப்பு, இரகசியமாகவே நடைபெறுமென்றும் வெற்றிபெறுபவர் குறைந்தது 125 வாக்குகளையாவது பெறவேண்டுமென்றும் இப்பதவியின் முடிவு பெப்ரவரி மாதம் 7-ம் திகதி அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## விலைவாசிகள்

புதுடில்லி, பெப். 1

விலைவாசிகளை ஒருமுகப்படுத்த பாரத அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

---

## "சகல பிரச்னைகளுக்கும் சர்வோதயம் மூலம்தீர்வு"

### காந்தி நினைவுதினத்தில் பேச்சு

கொழும்பு, வெள்ளி

"பல முகாங்களாகப் பிரிந்திருக்கும் உலக மக்களை ஒன்றுசேர்ந்து உலகில் சமாதானத்தை நிலைநிறுத்தக்கூடிய சர்வோதய தத்துவத்தை அளித்த மகாத்மா காந்தியடிகளை உலகம் என்றுமேமறக்க மாட்டாது" என்று மகாத்ம காந்தியடிகளின் அமரத்துவ தினத்தையொட்டி மருதானை சர்வோதய நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இலங்கை காந்தி சேவாசங்க பொதுக் காரியதரிசி திரு. சோ. க. தம்பிப்பிள்ளை பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், கிராமத்தில், நாட்டில், உலகத்தில் ஏற்படும் எந்தப் பிரச்சினைகளையும் சர்வோதய மூலம் தீர்த்து வைக்க முடியும். இதற்காகவே மகாத்மா காந்தியடிகள் சாந்தி சேனையை நிறுவினரென்றும் இது சர்வோதய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு வினோபாஜியின் தலைமையில் இன்று சிறப்பாக இயங்கி வருகிறதென்றும் சாந்திசேனை மூலம் இலங்கையிலும் சிறந்த சேவை செய்யமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை சர்வோதய சிரமதான இயக்க அமைப்பாளர் திரு. ஏ. ரி. ஆரியரத்ன பேசுகையில், இலங்கையர் என்ற அடிப்படையில் எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தக் கூடிய சிறந்த வழியைக் காட்டுவது சர்வோதயம் என்றும் இது ஒரு இனத்தவருக்கோ ஒரு மதத்தினருக்கோ மட்டும் உரியதல்லவென்றும் எங்கள் நாட்டில் இன்று எழுந்துள்ள எந்தச் சிக்கல்களையும் சர்வோதய மூலம் சுமுகமாகத் தீர்த்து வைகக முடியுமென்றும் இது அனுபவத்தில் கண்ட உண்மை என்றும் கூறினர்.

வித்தியோதய பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. கே. அறம்பத்த உட்படப் பலர் பேசினர்கள்.

### சிங்களவருக்கு தமிழ்வகுப்பு

நாட்டின் தேசிய ஒற்றுமைக்காக சிங்களவர் தமிழையும், தமிழர் சிங்களத்தையும் கற்க வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன், சிங்களவர் தமிழ் கற்பதற்கான வகுப்பை வருகிற மாதம் 11-ம் திகதி தொடக்கம் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் சர்வோதய நிலையத்தில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## மணி வாக்கு

ஜனநாயக ஆட்சியை நடத்துவோர், முற்றிலும் சுயநலமற்றவராக இருக்க வேண்டும். தங்கள் சொந்த, அல்லது கட்சி நன்மையை நினையாமல், ஜனநாயகத்தின் நன்மையையே கருதவேண்டும்.

—மகாத்மா காந்தி.


# ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 20உ (2-2-63)


## அரசாங்க வர்த்தக கார்ப்பரேஷன்

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தைக் கட்டுப்பாடு செய்வதற்காக அரசாங்க வர்த்தக கார்ப்பரேஷனை அண்மையில் அமைக்கப்போவதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது. அரசாங்கத்துக்கு இப்போது ஏற்பட்டுவரும் பெரிய நஷ்டத்தைக் குறைப்பதற்கும், பல நாடுகளுடனும் அரசாங்கம் செய்துகொண்டுள்ள வர்த்தக உடன்படிக்கைகளைச் சீராக நிறைவேற்றி வைப்பதற்கும் இவ்வித ஸ்தாபனம் அவசியமென்று தனிப்பட்ட ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்களுக்கு அவ்வப்போது தக்க யோசனைகள் கூறி, அந்த வியாபாரத்தையும் தீவிர கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

இது மிக முக்கியமான விஷயம். தனிப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து ஏற்றுமதி இறக்குமதி செய்ய உரிமை இருக்குமென்றாலும், அவர்கள் கண்டிப்பான கட்டுப்பாட்டுக்கு உட்படவேண்டி இருக்கும். கட்டுப்பாடு ஏற்பட்டால், விலைவாசிகள் உயர்ந்து, பொதுமக்களின் வாழ்க்கைச் செலவும் அதிகரிப்பதைப் பார்க்கிறோம். அவ்வித தீங்கு புதிய ஸ்தாபனத்தால் ஏற்பட்டுவிடக்கூடாதென்பது பொதுமக்கள் கவலை.

புதிய ஸ்தாபனமும், கட்டுப்பாடும் எவ்விதமிருக்குமென்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை. அரசாங்கநிர்வாகத்தில் ஏற்கெனவே லஞ்ச ஊழல்கள் அதிகரித்திருப்பதாகப் புகார்கள் உண்டு. பல கோடிக் கணக்கான வர்த்தகத்தை கட்டுப்பாடு செய்கையில், பல பெருச்சாளிகள் இந்த ஸ்தாபனத்தில் புகுந்து, சுரண்டல்களை நடத்தாமல் மிகக் கண்டிப்பாகப் பார்த்துக்கொள்ள வேண்டியதவசியமாகும். தேசஉடமை ஆக்கப்பட்ட பல ஸ்தாபனங்களில் வேலை நிறுத்தங்களும், நஷ்டங்களும் ஏற்படுவதை சகஜமாகப் பார்க்கிறோம். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் இந்நாட்டுக்கு உயிர்போனறதால, இவ்விஷயத்தில் அதிக கவனமாக இருக்க வேண்டிய அவசியத்தை நாம் வற்வுறுத்தத் தேவையில்லை.

ஏற்கெனவே இறக்குமதி கட்டுப்பாடு விஷயமாக திடீர் திடீரென அரசாங்கம் போடும் உத்தரவுகளும், தீர்வை மாற்றங்களும் வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் அதிக சங்கடங்கள் ஏற்பட்டு, நிலைமை தெளிவற்றதாயும் வீண் பீதி அளிப்பதாகவுமுள்ளது. வர்த்தகர்கள் முடிவில் பொதுமக்கள் தலையிலேயே இந்தப் பளுவை எல்லாம் ஏற்றுகின்றார்கள். மேலும் வெளிநாட்டுச் செலாவணியை பாதுகாப்பதாகச் சொல்லி, இறக்குமதிகளை, கண்மூடித்தனமாகக் கட்டுப்படுத்தியதால் இங்கு பல சிறிய கைத்தொழில்கள் மூடப்பட்டு பலர் வேலை இழக்கவும் நேரிட்டுள்ளதாகத் தெரிகிறது. வர்த்தக ஸ்தாபனங்களிலும் பல சிப்பந்திகள் வேலை இழந்து, வேலையில்லாக் கஷ்டமும் அதிகரித்துள்ளதாம். முக்கியமான புதிய பொறுப்பை அரசாங்கம் ஏற்க இருக்கும் இச்சமயத்தில் இவற்றையெல்லாம் கவனித்து, உள்நாட்டில் கைத்தொழில்கள் தடை இன்றி அபிவிருத்தியடையவும், வேலையில்லாக் கஷ்டங்கள் குறையவும் பார்த்துக்கொள்ளவேண்டும். அனுபவமில்லாத காரணத்தால் இவ்விஷயத்தில் அதிக தவறுகள் ஏற்படின், அது பொதுமக்களை அதிகமாக பாதித்து, நாட்டு நன்மையைவிட அதிக தீமையைச் செய்யக்கூடும். நல்ல அனுபவமும், நேர்மையுள்ளவர்களையே இந்த ஸ்தாபனத்துக்கு நிர்வாகிகளாக நியமிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தத் தேவையில்லை.

# வங்கி தேசியமயமாகியதனுல் நஷ்டஈடு வழங்கப்படுமா?

## செனட்சபைக்கு வரும் கேள்வி

கொழும்பு, வெள்ளி

இம்மாதம் 5-ந் திகதி செனட்சபை கூடும்பொழுது பின்வரும் கேள்வியை நீதி அமைச்சரிடம் செனட்டர் ஆதம் அலி கேட்பார்.

1. (அ) இருவருட காலத்துக்கு முன்னர் இலங்கை வங்கி தேசியமயமாக்கப் பட்டதையும் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய இலாபப் பங்கையும் மூலதனப் பெறுமானத்தையும் இதன் காரணமாக பங்குதாரர் இழந்துள்ளனரென்பதையும இலங்கை அரசாங்கத்தினர் அறிவார்களா? (ஆ) பங்குதாரர் தமது பணத்தை இழந்து நிற்பதைத்தான் அரசாங்கத்தினர் நோக்கமாகக் கொண்டுள்ளனரா? (இ) அவ்வாறில்லையாயின், அளவுமீறிய இக்கால தாமதத்தின் காரணம் என்ன? (ஈ) பல சிறு பங்குதாரர் தமது முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருமானத்தைத்தான் சீவனத்துக்கு நம்பியிருக்கின்றனரென்பதை அரசாங்கத்தினர் அறிவார்களா? (உ) ஈடு வழங்குவதென அரசாங்கத்தினர் தீர்மானிக்குமிடத்து, சூயஸ் கால்வாய்ப் பங்குகளை நாட்டுரிமையாக்கும்பொழுது பங்குகளின் முதல் நாளைய பெறுமானத்தின் அடிப்படையில் ஈடு வழங்கிய எகிப்திய அரசாங்கத்தின் கொள்கையை அவர்கள் பின்பற்றுவார்களா? (ஊ) ஈடு வழங்கும்பொழுது, பங்குதாரருக்கு இடைக்காலத்துக்கென வங்கி விகிதங்களில் வட்டி வழங்கவும் அரசாங்கத்தினர் உறுதி பூணுவார்களா?

### தீப்பெட்டி உற்பத்தி

1938-ம் ஆண்டின் 9-ம் இலக்க தீப்பெட்டி உற்பத்தி (ஒழுங்கு படுத்தல்) கட்டளைச் சட்டம், அதற்குப் பிந்திய சட்டங்கள், பிரமாணங்கள் ஆகியவற்றின் ஏற்பாடுகளின்படி அரசாங்க ஒழுங்கின் கீழிருக்கும் தீப்பெட்டி உற்பத்திக் கைத்தொழில் பற்றிய கீழ்க்காணும் விபரங்களை அவர் தருவாரா?

(அ) தீப்பெட்டி உற்பத்திக்கென தற்பொழுது அனுமதி பெற்றோரின் பெயர்களுடன் அவர்கள் 1938-ல் முதன்முறையாக இவ்வாறு அனுமதி பெற்றவர்களாயில்லாதிருக்குமிடத்து, பிற் கூறியோருக்கு என்ன உறவு?"

(ஆ) 1962-ம் ஆண்டில் தீப்பெட்டி உற்பத்தி செய்த ஆலைகளும் அவற்றின் நிலையங்கள், உரிமை அல்லது வாடகை உரிமை ஆகியவற்றில் 1957-ம் ஆண்டுக்குப் பின் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாதாயினும்?

(இ) 1958-ம் ஆண்டுக்குப் பிந்திய வருடங்களொவ்வொன்றிலும் ஒவ்வோர் ஆலையினதும் உற்பத்தியும் இக்காலத்தில் ஒவ்வோர் அனுமதிதாரருக்கும் வழங்கப்பட்ட அனுமதிப பங்கும்?

(ஈ) 1957-ம் ஆண்டுக்குப் பிந்திய ஒவ்வொரு வருடத்திலும் இறக்குமதியான தீப்பெட்டிகளின் தொகையுடன் இக்காலத்தில் இங்கையில் உள்ளபடியாகப் பாவிக்கப்பட்ட தீப்பெட்டிகளின் கூட்டுத் தொகை?

(உ) 1958-1962 வரையுள்ள காலத்தில் பெரிய பெட்டி ஒவ்வொன்றினதும் விற்பனைக்கென அரசாங்கம் விதித்த உச்ச, ஆகக்குறைந்த மொத்த, சில்லறை விலைகளும் செலுத்தவேண்டிய சுற்று நாடாத் தீர்வையும?

(ஊ) 1958-1962 வரையுள்ள காலத்தில் சுற்று நாடா விற்பனையினல் அரசாங்கம் பெற்ற இறை விபரங்கள?

(எ) 1958-1962 வரையுள்ள வருடங்களில் தீப்பெட்டி உற்பத்திக்கான அனுமதி பெற்ற உற்பத்தி ஆலைகள ஒவ்வொன்றிலும் ஒழுங்காகதத் தொழில் புரிந்த வேலையாளரின் எண்ணிக்கை, ஒவ்வோர் ஆலையினதும நுட்ப, பாதி-நுட்ப, நுட்பமில் வேலையாளரின் உள்ளபடியான சராசரி மாதாந்த ஊதியம் ஆகியவற்றின் விபரங்கள்?

(ஏ) 1958-1962 வரையுள்ள காலத்தில் தீப்பெட்டி உற்பத்தி செய்து விற்றதில் ஒவ்வோர் அனுமதிதாரரும் பெற்ற இலாபத்தின் விபரங்கள்?

இல. 3/62-63

2. செனட்டர் ஏ. ரி. ஏ. டி' சூஸா, நீதி அமைச்சரைக் கேட்பதற்கு:-

தீப்பெட்டி விநியோகத்தை கூடுமானவரை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் மூலமே வைத்துக்கொள்வதற்காக கைத்தொழில், வர்த்தக அமைச்சுக்கள் நடவடிக்கை எடுக்கின்றனவென 1961 ஆகஸ்ட் 23-ம் நாளன்று நீதி அமைச்சர் தனக்கு அளித்த வாக்குறுதிக்கிணங்க 1962-ம் வருடத்தில் தீப்பெட்டி மொத்த வற்பனவின் எவ்விகித சதவிகிதத்தை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் கையாண்டதென்பதையும் தீப்பெட்டி மொத்த விற்பனவிலீடுபட்ட தனியாரின் பெயர்களையும் அவர் சபைக்குக் கூறுவாரா?

## இரத்தினக் கம்பளம்

# சுமைதாங்கி

பதுமன்

வடபகுதியிற் சில இடங்களில் சுமைதாங்கிகள் இல்லாத காரணத்தால் தலையிற் சுமையுடன் செல்லும் கமக்காரர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர் எனக் கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியில் ஒருவர் எழுதியிருக்கின்றார்.

சந்தைக்குத் தமது விளைபொருள்களைச் சுமந்துகொண்டு வியர்வை சிந்த விசையாகச் செல்லும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சுமைதாங்கி பெருந்துணைபுரிகின்றதென்பது உண்மையே. இப்போது நாகரிகம் வளர வளரத் தெருவோரங்களில் மரங்களை நடுவதும் சுமைதாங்கிகளை நிறுவுவதும் அவசியமற்ற காரியங்களாகக் கருதப்படுகின்றது போலும்.

அந்தக் காலத்திலே மடங்களும், கிணறுகளும், தண்ணீர்த் தொட்டிகளும், சுமைதாங்கிகளும், நிழல் மரங்களும் நாடெங்கணும் காட்சியளித்தன. வண்டிகளிற் போய்வருவோருக்கும் பாலைதசாரிகளுக்கும் இவை பாலைவனத்துப் பசுந்தரை போல் விளங்கின. மாடுகளை அவிழ்த்துக் களையாறச் செய்வதுடன் பிரயாணிகளும் கொஞ்ச நேரம் மடங்களிற் படுத்துறங்கித் தமது அலுப்பைத் தீர்த்துவந்தனர்.

இப்போது நவீன போக்குவரத்துச் சாதனங்கள் பெருகி வருவதால் மடங்களும் சுமைதாங்கிகளும் தேவையற்றனவாகிவிட்டனபோலும்! சில இடங்களில் இவை குட்டிச் சுவர்களாகவே இன்று காட்சியளிக்கின்றன. எனினும் சுமைதாங்கிகளின் சேவை நாட்டுக்குத் தேவையென்பதைச் சிலர் இன்று உணர்ந்துவருவது உண்மையாகவே வரவேற்கத்தக்கதாகும். பழைய தமிழ் மரபுகளைப் பாதுகாக்கவேண்டிய தன் அவசியத்தைக் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில தினசரி வற்புறுத்தியிருப்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள் என்றே பதுமனுர் நம்புகின்ருர்.

### வரிச் சுமை

பாரங்களையும், பெரிய சுமைகளையும் சுமைதாங்கிகள் பொறுமையுடன் தாங்குகின்றன. ஆனல், அரசாங்கத்தின் வரிச் சுமையைத் தாங்க முடியாமல் மக்கள் உபத்திரவபபடுவதை யாரிடம் சொல்வது! வரிப் பளுவைத் தாங்குவதற்கு நாடெங்கணும் வரிச் சுமைதாங்கிகளை அரசாங்கம் தனது செலவிலேயே அமைக்குமாயின் எத்தனையோ பேருக்கு அது ஆறுதல் அளிப்பதாகும். அத்துடன் புத்தகச் சுமையுடன் பள்ளிக்கூடம் செல்லும் மாணவ மாணவிகளுக்கும் தெருவோரங்களில் சுமைதாங்கிகள் நிறுவுவது அவசியமென்றே தோன்றுகின்றது.

### சீனத்துப் பெண்கள்

செஞ்சீனவிலே இப்போது துணிப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் அங்குள்ள பெண்மணிகள் இப்போது காற்சட்டை அணிந்துவருகின்ருர்கள் எனத் தமிழ்நாட்டுப் பெண்மணி ஒருவர் சென்னைக் கூட்டம் ஒன்றிலே குறிப்பிட்டிருந்தார். இவர் ஒரு சட்டசபை அங்கத்தவராவர். சீனப் பெண்கள் நீண்ட பெரிய அங்கி அணிவது வழக்கம். இந்த உடைக்குத் துணி அதிகம் செலவாகின்ற காரணத்தால் அவர்கள் அரைக் காற்சட்டை அணிகின்றனராம்.

இலங்கையில்உள்ள எங்களுக்கு இது எவ்வித ஆச்சரியத்தையும் உண்டாக்கமாட்டாது. ஏனெனில் இங்குள்ள ஒருசில பெண்மணிகள் இப்போது பல ஆண்டுகளாகக் காற்சட்டை மாட்டிக்கொண்டு காரில பறப்பதும் சைக்கிள் ஓட்டுவதும பழங்கதையாகிவிட்டதே. நாகரிகம் உயர்ந்து

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாரன் எழுதுவது

"ஹலோ! இங்கே டாக்டர் நாகநாதன் பேசுகிறேன்."

"நமஸ்காரம். என்ன விசேஷம்?"

"என் வழக்கில் இரு எதிரிகளையும் குற்றவாளிகள் என்று நீதிபதி கூறி, கண்டனை கூறுவதை 15-ந் திகதிக்கு ஒத்திவைத்திருக்கிருர."

"மிச்சம் சந்தோஷம். கங்கிராஜுலேஷன்."

நேற்றுக்காலை 11 மணிக்கு டெலிபோனில் இந்த நல்ல செய்தியை டாக்டர் அறிவித்தார். குறிப்பிட்ட வழக்கைப் பற்றியோ தீர்ப்பைக்குறித்தோ எதுவும் எழுதுவது முறையாகாது. நீதிமன்றத்தை அவமதிப்பதாகுமென்றும் சொல்லுவார்கள். வழக்கு அப்பீலுக்கும்போகக்கூடும். ஆகவே இதைப்பற்றி எதுவும் கூற விரும்பவில்லை.

ஆனல் பொதுவாக, இத்தீர்ப்பைக்கேட்க இங்கு பொதுமக்களிடையே ஆறுதலும், புதுநம்பிக்கையும், மகிழ்ச்சியும் ஏற்படுவதாக இருக்கும்.

பொலிஸ் பலாத்காரத்தைப் பற்றி பார்லிமெண்ட் சபையிலே எவ்வளவோ முறை பலர் கரடியாகக் கத்தியும், கேள்விமுறை எதுவுமில்லை. பலாத்கார காரியங்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றனதேயன்றி குறையக்காணேம். இவ்வித திக்கற்ற நிலையில், நீதிமன்றம் தயவு தாட்சண்யமின்றி நடுக்கண்ட நீதிவழங்க இருக்கின்றதென்பது, மக்களுக்கும் மேலான பாதுகாப்பாகும்.

நீதிமன்றத்தில் என்ன தண்டனை கிடைத்தாலும், அதிகார வர்க்கத்தின் தயவினுல், சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தியோக, சம்பளஉயர்வுகள் கிடைக்கலாமென்று கூறுகிருர் ஓர் அன்பர். அப்படிச் செய்வதாயின், அது அரசாங்கமே, நீதிமன்றத்தை அவமதித்த பெரும் குற்றத்துக்கு உள்ளாகும். அப்படி எதுவும் நடைபெருதென்றும், இங்கு இனியாவது, அதிகாரவர்க்கம், பொலிஸ் இவர்களது மனப்பான்மையில் நல்ல மாறுதல் ஏற்படுமென்றும் மக்கள் பொலிஸ் பயமின்றிவாழ முடியுமென்றும் நம்புவோம்.

* *

நமது கல்விமந்திரிக்கு பெரிய 'சபாஷ்' போடவேண்டும். பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்யவும், புதிய ஆசிரியர்களை நியமிக்கவும் அரசாங்க கஜானுவில்பணமில்லைஎன்றும், இதனுல் அவர் கல்வி லாட்டரி நடத்தத் தீர்மானித்திருப்பதாயும் ஒருசெய்தி கூறுகிறது.

ஏற்கனவே ஆஸ்பத்திரி லாட்டரியை சுகாதார அமைச்சு நடத்துகிறதல்லவா? அதை பொதுவாக தேசிய லாட்டரியாக நடத்தி, வருமானத்தை பல அமைச்சுக்களுக்கும் பங்கிட்டளிக்கலாமென்று யோசனை கூறினராம் மந்திரி மாமூத். ஆனல சுகாதார அமைச்சு இதை ஒப்பாததால், தாமே தனி லாட்டரி நடத்த அவர் தீர்மானித்து விட்டாராம். பலே!

புதிய நிதிமந்திரிக்கு இது நல்லதோர் வழிகாட்டியாகும். பணப்பஞ்சத்தைப் பற்றி இனி கவலையே இல்லை. இனி மந்திரிகளுக்கு சம்பளம் கொடுக்க பணம் இல்லாவிட்டாலும்சரி, உடனே "மந்திரி லாட்டரி"யை நடத்தி. சம்பளம் எடுத்துக்கொள்ளலாம். என்னை கேட்டால், இனிஸ்தலஸ்தாபனங்கள் முதலியவற்றுககும் இந்த உரிமை அளித்து லாட்டரி நடத்தச் செய்தால் அவற்றின் பணக்கஷ்டமும் தீர்ந்து, பல அபிவிருத்திகளும் ஏற்படமுடியும்.

இலங்கை எல்லாம் ஒரே லாட்டரி மயமாகி, நம்மில் சிலரை திடீர் பணக்காரர் ஆக்குவதுடன், நமக்கும் பணப்பிரச்னையே இல்லாமலும் செய்துவிடலாமல்லவா? லாட்டரி பிழைப்பு வாழ்க!

## சிங்களமொழி ஆராய்ச்சி

கண்டி, வெள்ளி

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மொழி ஆய்வுக்கழகம் என்ற பெயரில் ஒரு புதிய சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது சிங்கள மொழி வரலாறு பற்றி ஆராய்ச்சிகள் நடத்தி அதுபற்றிய முடிவுகளை அவ்வப்போது பிரசுரங்களாக வெளியிட இச்சங்கம் எண்ணியுள்ளது. இதன் ஆரம்பக் கூட்டம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடைபெற்றது. புதைபொருள் ஆராய்ச்சித்துறை பேராசிரியர் டாக்டர் செனரத் பரணவிதான தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. மொழி ஆராய்ச்சித் துறையில் சிரத்தைகொண்ட பல்கலைக்கழக விரிவுரையாளர் பலர் இக் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தார்கள்.

இதுமாதிரி ஓர் ஆராய்ச்சி நடத்தவேண்டியதன் அவசியம் பற்றி சிங்கள மொழிப் பிரிவைச்சேர்ந்த மொழித்துறை விரிவுரையாளர் திரு. சுகத பாலாடி,சில்வாவும் சிங்கள மொழிப்பிரிவுத் தலைவர் டாக்டர் டி. இ. ஹெட்டி ஆராச்சியும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். சங்கத்தை மேலும் பரந்ததொரு அடிப்படையில் விஸ்தரிப்பதுபற்றியும் இவர்கள்பலயோசனைகளைத்தெரிவித்தார்கள். அதற்கான சட்ட திட்டங்களை வகுப்பதற்கு ஒரு உப குழு நியமிக்கப்பட்டது. டாக்டர் பரணவிதான அதன் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

—

## சலுகைகள் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் 'சுதந்திர இலங்கையில்' தமிழ்ப்பேசும் மக்கள் இன்று தம்மைத் தாமே ஆளமுடியாத நிர்வாகத்தில் முழுபபங்கும் பெறமுடியாத நிலையில் இருப்பதனுல் நாம் சுதந்திரமடைந்ததாகக்கருத முடிடாது. இதனுல் தான் நாம் சுதந்திர தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்கவேண்டிய நிலையில் உள்ளோம்.

என்று இந்த நாட்டின் நிர்வாகத்தின்எமக்குரிய பங்கைப் பெற்றுக் கொள்ள முடியுமோ அன்று தான் நாம் இந்த நாட்டின் சுதந்திர மக்களாகக் கருத முடியும். எமது கௌரவம் சமுகத்தின் கௌரவமெனக் கருதினுலேயொழிய நாம் தன்மானமுள்ள சமுகத்தை உருவாக்க முடியாது.

—

## இரத்தினக்கப்பலம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதற்கு சீனப்பெண்மணிகளின் உடையும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

●

### இரு ஆசைகள்

இராஜாஜி தமக்கு இரு ஆசைகள் இருப்பதாகத் தெரிவித்திருக்கின்ருர். முதலாவதாக ஆணு ஆயுதப் பரீட்சையை வல்லரசுகள் கைவிட வேண்டும். இரண்டாவது சீனத்துக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் இந்தியா பொது இராணுவக்கூட்டு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

இந்த இரு ஆசைகளும் அவருடைய வாழ்நாளைக்குள் நிறைவேறிவிடும் என அவர் தீர்க்கமாக நம்புகின்ருர்.

பலமிக்க நாடுகளின் உதவியின்றி அதிக வரிகள் போடுவதிஞலோ, மக்களிடமிருந்து தங்கத்தை எடுத்துக்கொள்வதிஞலோ இந்தியாவின் பாதுகாப்பை வலுப்படுத்திவிடமுடியாதென்பது இராஜாஜியின் கருத்தாகும்.

## 60,000 சுயசேவை ஸ்டோர்கள்

ஹாம்பர்க், பெப். 1

ஐரோப்பிய நாடுகளில் சுமார் 60,000 சுயசேவை ஸ்டோர்கள் இருந்துவருகின்கின்றன. போதிய ஆட்கள் அகப்படாத காரணத்தினுல் இத்தகைய கடைகளின் எண்ணிக்கை பெருகிவருகின்றன. 1956-ம் ஆண்டுமுடிவில் ஐரோப்பாவில் 11,000 சுயசேவை ஸ்டோர்கள் மட்டுமே இருந்தன.

மேற்கு ஜெர்மனியில் இம்மாதிரி கடைகள் மிக அதிகமாக இருந்துவருகின்றன. 1956-ல் 1379 சுயசேவை கடைகளே இருந்தன. ஆனல் 1962 ஆரம்பத்தில் இந்த எண்ணிக்கை 30,680 ஆக பெருகியுள்ளது. ஆறு சதுர மைல்களுக்கு ஒரு கடைவீதம் இருந்துவருகிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

—

## முதலாளித்துவத்தை முழுமூச்சாக எதிர்ப்பேன்

—எம். பி.

குருணுகல், வெள்ளி

இந்நாட்டில் முதலாளித்துவம் உள்ளவரை இன்றைய அரசாங்கம் அதன் சோஷலிஸ திட்டத்தைக் கொண்டு நடத்துவது சங்கடமான காரியமாகவே இருக்கும். முதலாளித்துவத்தை இந்நாட்டிலிருந்து அறவே ஒழிப்பதற்காகப் பாடுபடுவதே என் வேலையாயிருக்கும் என்பதாக குருணுகல் தொகுதிக்குப புதிதாக தெரிவுசெய்யப்பட்ட திரு. எம். ஏ. ஜே. விஜயசிங்கா அவருக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்புக்குப் பதிலளித்தபோது கூறினர்.

தம்மைத் தெரிவுசெய்பவர்கள் திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைகளை ஆமோதித்திருக்கிருர்கள் என்றும் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் ஆட்சியை வரவேற்றிருப்பதாயும் அவர் மேலும் கூறினர்.

—

## தியாகராஜ உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை சங்கீதவித்துவ சபையின் ஆதரவில் நல்லூர் கந்தசுவாமி கோயில் சண்முக தீர்த்த மண்டபத்தில் இன்று மாலை தியாகராஜர் உற்சவம் ஆரம்பமாகி நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை காலை விஷேச ஆராதனைகள் நிகழும். இரு தினங்களிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள வித்துவான்களும்வித்துவாம்சினிகளும்இசை விருந்தளிப்பர். இந்த உற்சவத்தில் வித்துவசபை 'கானம்' என்னும் பத்திரிகையை வெளியிடவிருப்பதாகவும் தெரிகிறது.

—

## கண்டி மாநகர சபை

கண்டி, வெள்ளி

செலவினங்களைக் குறைக்கவும் வரியிறுப்போருக்கு மேலதிக ஆற்றலுடன் துரிதசேவை அளிக்கும் வகையில் மாநகர சபை நிர்வாகத்தை முற்றிலும் மாற்றி அமைக்கவும் கூடிய வழிவகைகளை ஏற்படுத்தும் நோக்குடன் கண்டி மாநகர சபையின் தெரிவுக்குழு ஒன்று அதன் எல்லா இலாகாகளின் வேலை முறைகளையும் நேரில் பார்வையிட்டு பரிசீலனை செய்துவருகிறது.

—

### மன்னிப்பு

கந்தானை, வெள்ளி

நடுநிசியில், ஜா-எல ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கிருந்த அப்போதிக்கரி யொருவரை பயமுறுத்திய குற்றத்துக்காக வெலிகம பிட்டியாவைச் சேர்ந்த ஒருவர், கோர்ட்டில் அந்த அப்போதிக்கரியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். பின்னர் இவர் எச்சரிக்கையுடன் விடுதலை செய்யப்பட்டார்.

## சுதந்திரதினத்தில யானை ஓட்டம்

கண்டி, வெள்ளி

இம்மாதம் 4-ந்திகதி இங்கு நடைபெறவிருக்கும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் யானைகள் ஓட்டப் பந்தயம் ஒன்று நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது. கண்டி மாகாண அதிபர் வி. ஜே. சேரசிங்கா கொடியேற்று வைபவத்துடன் அன்று சுதந்திரதின நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். நகர மேயர், பார்லிமெண்ட் மெம்பர் உட்பட பலர் சுதந்திர விழாவில் கலந்துகொள்கின்றனர்.

—

## 1623 பஸ்கள் சேவையில் உள்ளன

கொழும்பு, வெள்ளி

நேற்று 1623 பஸ்கள்சேவையில் ஈடுபட்டதாக இ.போ.ச. அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. புதன்கிழமை சேவையில் ஈடுபட்ட பஸ்களைவிட 32 பஸ்கள் கூடுதலாக நேற்று சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 20 டிப்போக்களிலிருந்தும் மத்திய பஸ் நிலையத்திலிருந்தும் பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

—

## எம். பி. யின் நடத்தை பற்றி யூனியன் கடிதம்

### சுயமரியாதை இழக்கலாமா?

கொழும்பு, வெள்ளி

"அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவருடைய வீட்டு வேலையாளல்ல; அவர்களும் இந்த நாட்டுப் பிரஜைகளே. மற்றவர்களுக்கு இருக்கும் கௌரவம், சுயமரியாதை, பிற புரிமை யாவும் அவர்களுக்கும் இருக்கிறது."

இவ்வாறு அகில இலங்கை போஸ்ட்மாஸ்டர் யூனியன் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது. இவ்வாட்சேபக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட எம். பி. ஒருவர் மாத்தளை போஸ்ட்மாஸ்டரின் உதவி எழுதுவினைஞர் ஒருவரை கீழ்த்தரமான வார்த்தைகளால் நிந்தித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட எம். பி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவராவர். பெண் உத்தியோகஸ்தர்களையும் இவ்விதமாகப் பலதடவை அவர் நிந்தித்தாரென்று அந்த ஆட்சேபக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியான தகாத செயல்கள் அதிகரித்து வருவதாகவும் கூடிய மரியாதையும் நற்பழக்கமும் உடையவர்களென எதிர்பார்க்கப்படுபவர்கள் இவ்விதம் நடந்துகொண்டால் அவர்களுக்குரிய மரியாதையை அவர்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்படுமென்றும், இச்செயல்களினுல் வேலைகளே ஸ்தம்பித்துவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டால் அப்போது உரிய நடவடிக்கையில் இறங்குமாறு அங்கத்தவர்களைக் கேட்டுக்கொள்ளுமென்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

—

## திறப்பு விழா

கொழும்பு வெள்ளி,

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் முதலாவது மருந்தக நிலையத்தை வர்த்தக உணவு,கப்பல் மந்திரி திரு.டி பி. இலங்கரத்ன நாளைக் காலை யூனியன் பிளேசில் திறந்து வைப்பார்.

இந்த மருந்தக நிலையத்தில் இரவு வேளைகளிலும் மருந்துகள்விற்பனை செய்யப் படும் ஆயுள்வேத மருந்துகள் இம் மருந்தக நிலையத்தில் விரைவில் விற்பனை செய்யப் படும் என்று அறியப்படுகிறது.

## கட்டுநாயக்காவில் கட்டிய வீடுகள்

கட்டுநாயக்கா, வெள்ளி

கட்டுநாயக்காவிலிருந்த விமானப்படை ஆட்கள் வெளியேறியதுடன் அப்பகுதியில் வீடுகளின் வாடகைக் கட்டணம் வெகுவாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. விமானப்படை இங்கிருந்த நாளில் மாதம் 400 ரூபா வரை வாடகைக் கட்டணம் ஏறியிருந்தது. அதற்கான மாதிரியாக வீடுகளும் அமெரிக்க மோஸ்தரில் எல்லா நவீன வசதிகளுடனும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

சர்வதேச விமானப் போக்குவரத்து சேவையில் ஒரு மத்திய தளமாக கட்டுநாயக்கா விமான நிலயம் திறக்கப்படுமானல் அப்பொழுது இவ்வீடுகளில் சிலவற்றுக்குப் பழைய கிராக்கி ஏற்படக்கூடுமென்ற நம்பிக்கை இவ்வீடுகளைக் கட்டிக் கொடுத்தவர்களுக்கு இருக்கிறது. விமானப் படையைச் சேர்ந்த அதிகாரியொருவர் சமீபத்தில் இங்கிலாந்து திரும்பியது முதலாக அவர் குடியிருந்த வீடு காலியாகக் கிடக்கிறதென வீட்டுச் சொந்தக்காரர் தெரிவித்துள்ளார். இவ்வீடுகள் முனிசிபல் எல்லைக்கு வெளியே அமைக்கப்பெற்றிருப்பதாலும் அதன் வீட்டு வாடகைச் சட்ட விதிகளுக்கு புறம்பாயிருப்பதாலும் இவற்றைக் கட்டியவர்களுக்கு இது என்றைக்கும் ஓர் நன்றியாகவே இருந்துவருமென்ற நம்பிக்கையும் வீட்டுச் சொந்தக்காரருக்கு இருக்கிறது.

—

## கணவனை காணத் தடை!

### தெ. ஆ. அரசாங்கம் தடை

ஜோகன்ஸ்பர்க், பெப். 1

ஆபிரிக்கத் தலைவர் நெல்லன் மாண்டெலாவைக் காண அவருடைய மனைவி வின்னிமாண்டெலாவுக்குத் தடை விதிக்கக் கூடிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜோகன்ஸ்பர்க் பகுதியில் வின்னி இருக்கவேண்டுமென்றும், ஐந்துவருட காலம் கூட்டங்களில் கலந்துகொள்ளக் கூடாதென்றும், மற்ற தடை செய்யப்பட்ட நபர்களுடன் தொடர்புகொள்ளக் கூடாதென்றும் உத்தரவு கூறுகிறது.

தன் கணவன் தடைசெய்யப்பட்ட நபராதலால், அவரை வின்னி சந்திக்க முடியாது. தென் ஆபிரிக்கக் குடியரசு பிரகடனத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக மாண்டெலா பிரிடோறியா சிறையில் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிருர்.

—

## பாதுகாப்பு நிதி

புதுடில்லி, செப். 1

இந்திய பாதுகாப்பு நிதிக்கு மத்திய பிரதேஷ் முதன் மந்திரி இன்று பாரதப் பிரதமர் நேருவிடம் 10,850 கிராம் தங்கமும், ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியுள்ள காசோலையொன்றையும் அன்பளித்தார். இந்திய பாதுகாப்பு நிதிக்கு, மத்திய பிரதேச மக்கள் இதுவரை மூன்றுகோடியேஅறுபது லட்சம் ரூபாய அன்பளித்துள்ளனர்.

—

## ஹோலந்து—ரஷ்யா மீண்டும் தொடர்பு

மாஸ்கோ, பெப். 1

ஹோலந்தும் சோவியத் யூனியனும் 15 மாதங்களுக்குப் பின்னர் முதற் தடவையாக தூதர்களை பரிவர்த்தனை செய்யத் தொடங்குகிறது இத் தூதர்களாக யார், எப்போது நியமிக்கப்படுவார்கள் என்பது அறிவிக்கப்படவில்லை.

## இருநேரவகுப்பு

### பெற்ருேர் ஆட்சேபம்

அனுராதபுரம், வெள்ளி

வடமத்தியமாகாணத்தில் இருநேர (முழுநேர) வகுப்புகள் வைப்பதென்ற கல்வி இலாகாவின் தீர்மானத்திற்கு இங்குள்ள பல பெற்ருர் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள். அதிகமாக இம் மாகாணத்தில் பயிலும் 50 சத விகிதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் ஏழைகள் என்றும் அவர்களிற் பலர் காலையில் ஒருகோப்பை தேநீருடன் தான் பாடசாலைக்குச் சென்றுவருவதாகவும் பல பெற்ருேர்கள் தெரிவித்துள்ளார்கள்.

—

## உலக ஜனத்தொகை

'ஈழநாடு' 1-2-63 இதழில் வெளியான 'அதிகரித்துவரும் உலக ஜனத்தொகை' என்ற கட்டுரையில் உலக ஜனத்தொகையை 300 கோடி எனத் திருத்திக் கொள்க.

—

## பணம் என்னவாயிற்று?

### விபரம்காட்ட எம். பி. கோரிக்கை

அனுராதபுரம், வெள்ளி

குளங்களைத் திருத்துவதற்கென விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்தில் எவ்வளவுதொகை அந்த நோக்கத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது என்பதுபற்றிய பிரச்னை காணிவிவசாயமந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

குளங்களைத் திருத்துவதற்கென பலவகையாலும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணம் சில கந்தோர்களுக்கு தளபாடங்கள் வாங்கவும், சில உத்தியோகஸ்தர்களின் போக்குவரத்துச்செலவிற்கும் ஒதுக்கப்படுவதாய் புகார் கூறப்படுகிறதென திரு. ரத்னயக்கா திரு. சி. பி. டி' சில்வாவிடம் தெரிவித்துள்ளார். இப்படிச் செய்வதனுலேயே பல சிறிய குளங்கள் கவனிப்பாரற்று உபயோகமற்ற முறையில் இருப்பதாகவும் திரு. ரத்னயக்கா தெரிவித்துள்ளார். ஒவ்வொரு குளத்திற்கென வசூலிக்கப்பட்ட பணமும், அதற்குச் செலவான பணமும் புறம்பாக விரிவாக விளக்கமாகக் காட்டப்படவேண்டும் என மந்திரியை திரு. ரத்னயக்கா கேட்டுள்ளார். இதுபற்றித் தான் விரைவில் பரிசீலனை செய்வதாகா மந்திரி தெரிவித்துள்ளார்.

—

## 700,000 பவுண்டுகள் பெறுமதியான பஸ்வண்டிகள் இலங்கை கோரியுள்ளது

லண்டன், பெப். 1

ஆசியாவிலிருந்து ஒரு பிரிட்டிஷ் வாகன உற்பத்தியாளரால் பெறப்பட்ட மிகப்பெரிய கோரிக்கைகளுள் ஒன்றை லேலன்ட் மோட்டார் குழு பெற்றுள்ளது. இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இக் குழு 700,000 பவுண்டுகள் பெறுமதியான 300 ஒற்றை பஸ்வண்டிகளை உற்பத்தி செய்து கொடுக்கும்.

இத்துடன் மொத்தமாக போக்குவரத்துச் சபையின் கீழ் 2,000 லேலன்ட் குழு வண்டிகள் இருக்கும். சுமார் 2,000,000 பவுண்டுகள் பெறுமதியான வண்டிகள் கடந்த ஐந்து வருடங்களில் கொடுக்கப்பட்டன.

லேலண்டின் லங்காஷயர் ஆலை 271 வண்டிகளையும் இக் குழுவின் இந்திய கம்பெனியான சென்னையைச் சேர்ந்த மிஸேஸ் அஷோக் லேலண்ட் லிமிட்டெட் இன்னும் 41 வண்டிகளையும் அனுப்பும்.

# செய்தித்திரட்டு

## ஆசிரியர் குறைவு

திருமலை, வெள்ளி

அகில இலங்கை தமிழாசிரியர் சங்க திருமலைக் கிளைச் செயலாளர் திரு. எஸ். எஸ். அந்தோனிப்பிள்ளை விடுத்துள்ள ஓர் அறிக்கையில் திருமலை மாவட்டத்திலுள்ள பெரும்பாலானபாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக விருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

## இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

புலோலி மெதடிஸ் அரசினர் பாடசாலை உதவி ஆசிரியை திருமதி ஏ. பூரணம் பொன்னையா பெப்ரவரி மாத முதல், கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சோரன்பற்று தமிழ் கலவன்பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. கே. பொன்னையா குடத்தனை அ. மி. தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இம்மாத முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## படக்காட்சி

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை சென் தோமஸ் சனசமூக சேவா சங்கத்திலும் கரணவாய் இமையாணன் சனசமூக நிலையத்திலும் அமெரிக்க தூதுவராலயத்தரால் இலவச செய்திப் படங்கள் காண்பிக்கப்பட்டன.

## உதவிப்பணம்

பருத்தித்துறை, வெள்ளி

அரசாங்க கட்டடங்களைத் தவிர கரையோரப் பகுதிகளில் பெரும்புயலால் சேதத்துக்குள்ளான வீட்டுச்சொந்தக்காரர்களுக்கு சமார் 6000 ரூபாவுக்கும் 8000 ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகை உதவிப் பணமாக சமூகசேவை பகுதியினரால் அளிக்கப்படலாம் என தெரிய வருகிறது.

## திருத்தியமைத்தல்

பருத்தித்துறை, வெள்ளி

நீதிபதிவீடுதி, வாடிவீடு ஆகியவையின் புனருத்தாரண வேலைகட்கு முறையே 16500, 4500 ரூபாவரை தேவைப்படும் எனத்தெரிய வருகிறது. இக்கட்டிடங்களின் வேலைகளையும் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜமே பொறுப்பேற்க இணக்கம் தெரிவித்திருப்பதாக கூறப்படுகிறது.

## பிரியாவிடை

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்புத்துறை அரசினர் ஆர்ச் சூசையப்பர் பாடசாலை நீண்டகாலமாக விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றிய திரு. எக்ஸ். ஏ. குணரத்தினம் பண்டத்தரிப்பு அரசினர் மகளிர் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதை முன்னிட்டு இவருக்கு பாடசாலையில், பாடசாலை மாணவர்களாலும், பழைய மாணவர்களாலும் தேனீர் விருந்துபசார மொன்று அளிக்கப்பட்டது.

## செயற்குழுக் கூட்டம்

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கை புங்குடுதீவு சபையின் செயற்குழுக் கூட்டம் சபையின் உபதலைவர் திரு. நா. சொர்ணலிங்கம் தலைமையில் சபைக் காரியாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் பொதுச் செயலாளரால் சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. புங்குடுதீவில் மகளிர் கல்லூரி அமைப்பது சம்பந்தமாக் ஆராயப்பட்டபின்னர் புங்குடுதீவு உள்ளூராட்சி மன்றத்துடனும் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினருடனும் இதுபற்றி தொடர்பு கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## காந்திவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

காந்திஜியின் சிரார்த்ததின் விழா நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பேராசிரியர் சி. கருணைநந்தம் தலைமையில் நடைபெற்றது. விழாவில், திருவாளர்கள் எஸ். செல்வரத்தினம், தருமலிங்கம், செல்வநாயகம் ஆகியோர் பேசினர்.

## காட்டுக்குள் கார்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பதினறு பகுதிகளாக வெட்டப்பட்ட, களவாடப்பட்ட கார் ஒன்று பெலியத்தை என்ற இடத்திலுள்ள காட்டுக்குள்ளிருக்க கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக்கார் இப்பொழுது 16 பகுதிகளாக பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கிடக்கிறது.

## தவறிவிழுந்தார்

வெலிகம, வெள்ளி

கித்துள்மரத்திலிருந்து தவறி கீழே விழுந்த கலதனகொட என்ற இடத்தைச் சேர்ந்த என். சுமதிபால என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானர்.

## மகாநாடு

கொழும்பு, வெள்ளி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாடு ஏப்ரல் மாதம் 21, 22-ம் திகதிகளில் நடைபெறும். இம்மகாநாடு பதுளை அல்லது மாத்தறையில் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## 'கசிப்பு' மரணம்

பிங்கிரியா, வெள்ளி

'கசிப்பு' பிரியர் எச். எம் சிறிவர்த்தன என்பவர் அளவுக்கு மீறி கசிப்பு அருந்திய காரணத்தால் மரணமானர். இச்சம்பவம் மொலேலிய என்ற இடத்தில் நடைபெற்றது.

## உப்பில்லை

உடுநுவர, வெள்ளி

பம்பாய் வெங்காயத்துக்கும் ஈரவெண்காயத்துக்கும் இங்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள கூட்டுறவுக் கடைகளில், வெங்காயத் தட்டுப்பாடுடன் உப்புத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

## மோட்டார் லைசென்ஸ்

கொழும்பு, வெள்ளி

மோட்டார் வாகனங்கள் யாவும் மார்ச் மாதம் முதல் திகதிக்குள் லைசென்ஸ் பெற வேண்டுமென்று தொழில் தேசியமய சேவைகள் மந்திரி திரு. எம். பி. டி' இசற் ஸ்ரீவர்த்தன அறிவித்துள்ளார்.

## விசாரணை வேண்டும்

மாத்தறை, வெள்ளி

மாத்தறை ஆஸ்பத்திரி அதிகாரிகளின் கவலையீனத்தால் பிரசவத்தின்போது மரணமான நாரந்தனையைச் சேர்ந்த சோபி சோஜனின் மரணம் குறித்து விசாரணை நடத்தும்படி மாத்தறை-அம்பாந்தோட்டை சுகாதார தொழிலாளர்கள் யூனியன் மிரதம மந்திரிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

# பள்ளிக்கூட சுவீப் நடத்த மந்திரி தீர்மானம்

## அரசாங்கத்தின் அங்கீகாரத்தை கோரியுள்ளார்

கொழும்பு, வெள்ளி

பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நிதி திரட்டும்பொருட்டு கல்விச் சுவீப் ஒன்றை நடத்துவதற்கு கல்விமந்திரி திரு. பதியுதீன் மாமூத் தீர்மானித்துள்ளார். தனது இத் தீர்மானத்துக்கு அங்கீகாரம் பெறும்பொருட்டு இதுபற்றிய மகஜர் ஒன்றை அரசாங்கத்திடம் மந்திரி சமர்ப்பித்துள்ளார்.

பாடசாலைகளில் இவ்வருடம் 200,000க்கும் மேலான மாணவர்கள் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனல் பாடசாலைகளில் இட நெருக்கடி அதிகரித்துள்ளது. வருடா வருடம் அதிகரித்துவரும் மாணவர் தொகையை சமாளிக்க போதிய கட்டடங்கள் தேவைப்படும் வளர்ந்துவரும் இத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு, அதாவது பல பாடசாலைக் கட்டடங்களை அமைப்பதற்கு கல்வி சுவீப் ஒன்று நடத்தி போதிய பணம் பெறுவதே உகந்த வழி என மந்திரி கருதுகிறர்.

கல்வி இலாகாவிற்கு இப்பொழுது ஒதுக்கப்படும் பணம் ஆசிரியர்களின் சம்பளத்திற்கும் பாடசாலைகளின் நிர்வாகத்திற்கும் கட்டுமட்டாகவே போதியதாயிருப்பதாக கல்வியமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர். இப்பொழுது நிதிநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் கல்வி சுவீப் ஒன்றை நடத்தி அதன்மூலம் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு அரசாங்கம் புதிய ஆசிரியர்களை நியமிக்கலாம் எனவும் அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆஸ்பத்திரி சுவீப்புடன் கல்வி அமைச்சும் சேர்ந்து ஒரு தேசிய சுவீப்பைநடாத்தி இலாபப்பணத்தை இரு அமைச்சுகளும் பகிர்ந்துகொள்ளலாம் என சுகாதரா அமைச்சை கல்விமந்திரி முன்னர் கேட்டிருந்தார். ஆனல் சுகாதார அமைச்சு அதற்கு இணங்க மறுத்துவிட்டதால் இனித் தனியே கல்வி சுவீப் ஒன்றை நடத்துவதென அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

கல்வி சுவீப்பினல் வரும் லாபத்தை அதிக பாடசாலைகளை அமைக்கவும்,இப்பொழுதுள்ள பாடசாலைக் கட்டடங்களை திருத்தி அமைக்கவும்,போதிய உபகரணங்களை பாடசாலைகளுக்கு அளிக்கவும், மாணவர்களுக்குக் கூடிய வசதிகளை அளிக்கவும் செலவிட மந்திரி நிச்சயித்துள்ளார்.

## பெண்ணுக்கு விளக்க மறியல்

ஊர்காவற்றுறை, வெள்ளி

காரைநகர் வடக்கு சிவகாமியம்மன் கோவில் பூசகரான திரு. சர்மாஜயைர அடித்துக் காயப் படுத்தியதாக, அந்த கிராமத்தில் வசிக்கும் நாகம்மா என்ற பெண் மீது குற்றஞ்சாட்டி ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிரி நாகம்மா நேற்று நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிபதி எதிரியை விளக்க மறியலில் வைத்திருக்க உத்தர விட்டு விசாரணையை அடுத்தமாதம் 7-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## புதியகார்ப்பரேஷன் நிறுவப்படும்

கொழும்பு, வெள்ளி

தேசிய வர்த்தக கார்ப்பரேஷன் ஒன்றை மிகவிரைவில் அரசாங்கம் நிறுவவிருக்கின்றது. வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்னவின் சிபார்சின் பேரிலேயே இக்கார்ப்பரேஷன் நிறுவப்படவிருக்கிறது. கூட்டுறவு மொத்த ஸ்தாபன அதிகாரிகளும், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு இலாகா அதிகாரிகளும் மற்ற இலாகா அதிகாரிகளுடனும் கார்ப்பரேஷன் நிறுவுவதற்கான இறுதி விபரங்களை மந்திரி கலந்தாலோசித்தார்.

புதிதாக நிறுவப்படவிருக்கும் இக்கார்ப்பரேஷன் ஏற்றுமதி இறக்குமதி பற்றிக்கட்டுப்படுத்துவதோடு தனியார் வர்த்தக ஸ்தாபனங்களைக் கண்காணித்து, ஆலோசனைகளும் கூறும். குறிப்பாக இலங்கை வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்ட நாடுகளிலிருந்து தனியார் ஸ்தாபனங்கள் பொருட்களை ஏற்றுமதிசெய்யும் போது கார்ப்பரேஷன் மிகக் கவனமாக இருக்கும். இலங்கை அரசாங்கம் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்ட நாடுகளுக்கு தனியார் ஸ்தாபனங்கள் சில தேயிலை, றப்பர் போன்ற பொருட்களை விற்று அவர்களிடமிருந்து எதையும் வாங்காமல் விட்டுவிடுகிறார்கள். இது இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கே அவமரியாதையாக அமைகிறது. தனிப்பட்ட வர்த்தகர்களின் செயலுக்காக அரசாங்கம் ஒப்பந்த மரியாதையைக் காப்பாற்றும் பொருட்டு அந்நாடுகளில் கொடுக்கும் பொருட்களை வாங்க வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டு வருகிறது. புதிய கார்ப்பரேஷன் நிறுவப்படுவதால் இவ்வகையான செயல்கள் யாவும் நடைபெறுமல் தடைசெய்யப்படும்.

## அமெரிக்க தூதுகோஷ்டி

லியப்போல்ட்வில்லி, பெப். 1

ஆறுபேர் கொண்ட தூதுகோஷ்டி, நேற்றிரவு லியப்போல்ட்வில்லி வந்து சேர்ந்தது. காங்கோவின் தேவைகளை மதிப்பிடுவதற்காக இத் தூதுகோஷ்டியினர் காங்கோ வந்துள்ளனரென்றும் காங்கோவில் இவர்கள் பத்துத் தினங்கள் தங்கியிருப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பூங்காவிற்கு விஜயம்

அநுராதபுரம், வெள்ளி

வில்பத்திலுள்ள தேசிய பூங்காவிற்கு கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா இம்மாதம் ஐந்தாம் திகதி விஜயம் செய்வார். கவர்னர் ஜெனரலும் அவர் கோஷ்டியிலும் 5-ம். 6ம் திகதிகளில் மரதன்மடுவா பங்களாவில் தங்கியிருப்பார்கள்.

இம்மாதம்நாலாந்திகதிநடைபெறவிருக்கும் சுதந்திர தின விழாவையொட்டி கவர்னர்ஜெனரல் அநுராதபுரம் வரவிருப்பது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இங்கு மழை பெய்து கொண்டிருந்தாலும் சுதந்திர தினத்திற்கான இறுதி ஏற்பாடுகள் யாவும் முடிந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## சாரணர் காரியாலயம்

### கவர்னர் ஜெனரல் திறந்து வைப்பார்

கொழும்பு, வியாழன்

அனுராதபுரம் சாரணர் சங்கத்தின் புதிய தலைமைக் காரியாலத்தை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ, 5-ந் திகதி திறந்து வைப்பார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் சுமார் 800 சாரணர்கள் இருக்கிறார்கள். சாரணர் விஸ்தரிப்பு இயக்கமும் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரம் சாரணர் சங்கம், இரு பயிற்சி முகாம்களை நடத்தும்.

## எதிர்ப்பு

அனுராதபுரம், வெள்ளி

வடமத்திய மகாணத்திலுள்ள பாடசாலைகளில் இருநேர வகுப்புகள் நடத்தவேண்டும் என்ற கல்வி இலாகாவின் யோசனைக்கு ஏராளமான பெற்றோர்-ஆசிரிய சங்கங்கள் எதிர்பபுத் தெரிவித்துள்ளன


ஷோவலஸ் பசளைகள்

அதிக

உற்பத்தியைக்

கொடுக்கின்றன




363, கொள்ளுப்பிட்டி வீதி,

கொழும்பு 3.

குறித்த வேளையில் எவ்வித தடையுமின்றி பசளைகள்வி நியோகிக்கப்படும்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**சனி 2-2-63**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 ஏ. சங்கர ஐயர்—வயலின்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வி. எஸ். கந்தையா—பேச்சு, 9-30 எஸ். பரம் தில்லைராசா—பாட்டு.

**ஞாயிறு 3-2-63**

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 தமிழ்முலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 இஸ்லாமிய சமயப் பாடசாலை, 9-30 தேர்ந்த இசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-00 நேயர் விருப்பம், 1-00 மாதர்பகுதி, 1-30 வாத்திய இசை, 2-30 அனுராதபுர மத்திய கல்லூரியில் நடைபெறும் கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சி வர்ணனை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஆர். நமசிவாயம்—பாட்டு, 5-45 திரைக்குரல், 6-15 பாங்கு, 6-30 தாள வாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 கௌரவ கைத்தொழில், உள்நாட்டு கலாச்சார விவகார மந்திரி அவர்களின் சுதந்திர தினச் செய்தி, 7-10 அனுராதபுரப் புதிய பாலம், புதிய புகையிரத நிலையம் ஆகிய திறப்புவிழாக்கள் பற்றிய வர்ணனை (ஒலிப்பதிவு)

இரவு 7-30 பி. கந்தசாமி பிள்ளை—பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'அவரின் சோதனை'—நாடகம், 8-45 நிலைய ஒலிப்பதிவுகள், 10-15 இசையமுதம்.

### திருச்சி

**சனி 2-2-63**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35 சம்பா ஆர். சாரி—வீணை.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக் கனியமுது, 1-50 குரலிசை, 2-10 சம்பா ஆர். சாரி—வீணை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'வெற்றிப் பாதையில்'—நாடகம், 8-00 திரைப்பட இசை, 8-40 தேச பக்திப் பாடல்கள், 9-15 இசைக் கோவை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

**ஞாயிறு 3-2-63**

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35 ராமநாதபுரம் எம். என். நடராஜபிள்ளை—புல்லாங்குழல், 8-15 என். எல். கானசரஸ்வதி—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணி மலர், 1-50 வாத்திய இசை, 2-00 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 மதுரை வெங்கடேசன்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'கொட்டு முரசே'—சித்திரம், 7-45 கோவை பி. தக்ஷிணாமூர்த்தி—வயலின், 8-45 ராமநாதபுரம் எம். என். நடராஜபிள்ளை—புல்லாங்குழல், 9-45 தேசபக்திப் பாடல்கள், 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.

## கடற் படைக் கோஷ்டி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் அரசாங்க விளையாட்டுச் சங்க ஆதரவில் யாழ்- பொலிஸ் மைதானத்தில் நடை பெற்ற 'ஏ' பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் காங்கேசன் துறை சிமெந்தித் தொழிற்சாலைக் கோஷ்டியும், கடற்படைக் கோஷ்டியும் கலந்துகொண்டன.

கடற்படைக் கோஷ்டியினர் மிகத்திறமையாக விளையாடி 4-0 கோல்களால் சிமெந்தித் தொழிற்சாலைக் கோஷ்டியைத் தோற்கடித்தனர்.

திரு. ஸ்ரீ ஜெயராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## காந்தி நினைவுதினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூகநிலையம் மகாத்மா காந்தி நினைவுவிழாக் கொண்டாடியது. திரு. ச. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. செ. நாகராசா, திரு. ச. சம்பந்தர் ஆகியோரும் பேசினர் காந்தியடிகளின் ஆத்மா சாந்தியடைய இரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. திரு. த. யோகநாதர் நன்றிகூறினர்.

## "அடிகளார் போதனை வெறும் தத்துவமல்ல"

கிளிநொச்சி வெள்ளி

"உலக அதிசயங்களில் மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை நெறிகளும் ஒன்ருகிவிட்டது. மகாத்மாஜீ உலகிற்கு ஒரு புதிர். அவரது போதனைகள் உலக சமாதானத்திற்குச் சிறந்த ஔடதம். திருவள்ளுவப் பெருந்தகையின் "திருக்குறள்" எப்படி எங்கும் எல்லோருக்கும் பொதுவாக அமைந்ததோ அப்படியே காந்தியடிகளின் போதனைகளும் இந்த உலகின் எப்பகுதிக்கும் எல்லோருக்கும் பொதுவாக அமைந்துள்ளது. காந்தியடிகளின் போதனைகள் வெறும் தத்துவமல்ல. சாதனை செய்து தெளிந்த ஆத்மீக அமைப்புள்ள விஞ்ஞான போதனைகளாகும்".

இவ்வாறு திரு. சி. க. வேலாயுதபிள்ளை உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் மகாத்மா காந்தியடிகள் அமரத்துவமடைந்த சர்வோதய தின பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசகையில் குறிப்பிட்டார்.

காந்தி நிலையத்தில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்திற்கு முன் மகாத்மாகாந்தியடிகளுடைய புனித அஸ்தி யாழ்ப்பாணம் வந்த கலசத்துக்கும் மகாத்மாகாந்தியடிகள் டாக்டர் ஜே. வி. குமரப்பாஜீ ஆகியோரது படங்களுக்கும கதர் நூல் மாலைகளும் மலர்மாலைகளும் சூட்டப்பட்டன. மாணவர்கள் மௌன பிரார்த்தனையின் பின் காந்தியடிகளின் பிரார்த்தனை தோத்திரங்களை ஓதினர்கள்.

திரு. சி. க. வேலாயுதபிள்ளை மேலும் கூறியதாவது:-

மகாத்மா காந்தியடிகளின் மறைவு இந்த நாட்டுக்கு மாத்திரமல்ல உலகம் முழுவதும் ஒரு படிப்பனவாகும். வகுப்புவாதம், துவேஷம், போட்டி, பொருமை ஆகிய தீயசக்திகளினல் தீமையே ஒழிய நன்மையில்லை. தீயசக்திகளை சுயநலம் காரணமாக வளர்த்தவர்கள் மேற்கொண்டுதடுத்து நிறுத்தமுடியாமல் கஷ்டப்படுவதை நாம் பார்க்கின்ருேம்.

## இயந்திர பூசை ஆரம்பம்

திருக்கோணமலை, வெள்ளி

ஈழநாட்டில் பாடல் பெற்ற தலமாகிய திருக்கோணேஸ்வரத்தில் ஆலய நிர்மாண வேலைகள் பூர்த்தியாகி 3-4-63-ல் கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கின்றது அற்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளை கும்பாபிஷேக இணைப்புக் குழுவினரும் புனருத்தாரண சபையாரும்செய்து கொண்டிருக்கிருர்கள். 6-2-63 புதன்கிழமை காலை ஸ்ரீமாதுமையம்பாள் சமேத கேணேஸ்வரப் பெருமானுக்கும் விநாயகர் முதலிய மூர்த்திகளுக்கும் யந்திர பூசை ஆரம்பமாக இருக்கிறது. 31-3-63-ல் இயந்திர ஸ்தாபனம் செய்யும்வரை கோணேசர் கோவிலில் காலையும் மாலையும் இயந்திர பூசை தொடர்ந்து நடைபெறும்.

## பஸ் சேவை

கொழும்பு, வெள்ளி

இலங்கைப் போக்குவரத்து சபையைச் சேர்ந்த 1623 பஸ்கள் நேற்று ஓடின என்று அறிவிக்கப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை வரை 47 பஸ்கள் அதிகசேவை புரிந்ததென்றும் புதன்கிழமை 32 பஸ்கள் மேலதிக சேவை புரிந்ததென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிலியந்தலை டிப்போ மூடப்படவிருக்கிறதென்றும் ஆனல் பிலியந்தலை டிப்போவைச் சேர்ந்த மூன்று பஸ்கள்நேற்று ஓடின என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சங்கிலி திருடிய வழக்கு

### 8-ந் திகதி தீர்ப்பு

ஊர்காவற்றுறை, வெள்ளி

பிரசித்தி பெற்ற ஆலயமான நயினதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் கடந்த உற்சவ காலத்தின்போது, வல்லுவெட்டித்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி பெண்அம்மாவிடம் இருந்து 400 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைத் திருடியதாக, மூளாயைச் சேர்ந்த பொன்னுத்துரை பெண் மீனட்சி மீது தொடரப்பட்ட வழக்கு கடந்த வாரம் ஊர்காவற்றுறை கோர்ட் நீதிமன்றத்தில் விசாரணையின் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

நீதிபதி திரு. அரசுவால்டன் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 8-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## நெற்பயிர் செய்கைக்காரர்

### கூப்பன்களை ஒப்படைக்க உத்தரவு

கொழும்பு, வெள்ளி

நெற்காணிச் சொந்தக்காரர்களில் சில குறிப்பிட்ட பிரிவினரும் மற்றும் குத்தகைக்கு நிலமெடுத்துப் பயிர்செய்வோரும் தங்கள் அரிசி பங்கீட்டுப் புத்தகங்களை இன்று முதல் அந்தந்தப்பகுதி பிரிவு காரியாதிகாரிகள் கந்தோரில் ஒப்படைத்து விடுமாறு கேட்டுக் கொள்ளப்படுவர். ஒருதடவை போகத்தில் நெல்விளைவு 23 புசலுக்கு மேற்படவில்லையென்ருல அந்த வகுப்பினருக்கு இதில் ஒரு விதிவிலக்கு அளிப்பதென்று வர்த்தக உணவு அமைச்சு இலாகா தீர்மானித்துள்ளது. நெல் விளைச்சல் இந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டால் விதைநெல்லுக்காக கழித்துவிடுவது போக மிகுதியாயுள்ள ஒவ்வொரு புசலுக்கும 26 கூப்பன்கள் வீதம் ஒப்படைக்கக் கோரப்படும். ஒன்று அல்லது இரண்டு புசல் மேலதிகமாயிருந்தால் அதன் பேரில் அரிசிக் கூப்பன்களை ஒப்படைக்க வேண்டியதில்லை.


ஒஸ்டர்மில்க்




தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற் போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இறும்பு சத்தும், விட்டமின் டி யும் கொண்ட ஒரு சுத்தமான பால் ஆகாரம்.

உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் திகழ

ஒஸ்டர்மில்க்

ஒஸ்டர்மில்க் குழந்தை புத்தகம் இலவசமாய் கொடுக்கப்படும்.
தபாற் செலவுக்காக 10 சத முத்திரை ஒன்றை கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.
கிளக்ஸோ—அலன்பரிஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

# பல பகுதிகளில் வழக்கமான பஸ்சேவை

## இ. போ. ச. ஊழியர்களுக்கு தொழில் மந்திரி வேண்டுகோள்

கொழும்பு, வெள்ளி

இன்று நண்பகல்வரை, இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த 1707 பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன என்றும், நேற்றைய தினம் நாட்டின் பல பகுதிகளிலும் ஓடிய பஸ்களின் மொத்த எண்ணிக்கையைவிட அதிகமாக 84 பஸ்கள் இன்று சேவை புரிந்தனவென்றும் இ. போ. ச அறிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் இப்பொழுது வழமையான சேவைகள் நடைபெறுகின்றன என்றும் பொரளை, காலி டிப்போக்களில் குறிப்பிடத்தக்க பஸ்கள் சேவை புரிகின்றன என்றும் ஹோரணை டிப்போவிலும் வழமையான சேவைகள் இப்பொழுது நடைபெறுகிறதென்றும் இ. போ. ச அறிவித்துள்ளது.

இம்மாதம் 4-ம் திகதி அனுராதபுரத்தில் நடைபெறவிருக்கும் சுதந்திரதின நிகழ்ச்சிகளை முன்னிட்டு, இலங்கை போக்குவரத்துச்சபை மேலதிகமான பஸ்களை சேவையில் அமர்த்த ஒழுங்குகள் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரம் டிப்போவைச்சேர்ந்த 42 பஸ்கள் அதிக சேவைபுரியுமென்றும் இ. போ. ச அறிவித்துள்ளது.

### மந்திரி வேண்டுகோள்

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் வேலை நிறுத்தம் குறித்து கௌரவ தொழில் தேசியமயசேவை மந்திரிதிரு. எம். பி. டி' சற்சிறிவர்த்தன விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"பொதுமக்களுக்கு அசௌகரியம் கொடுக்காமல் தங்களது கடமைகளைத் தொடர்ந்து செய்யும் ஊழியர்களுக்கு முதலில் எனது மனபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வேண்டுகோளின் பேரில், வேலைக்குத் திரும்பியவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்

வேலைக்குத் திரும்பாமல் இருப்பவர்கள், உண்மை விபரத்தை அறிந்து உடனடியாக வேலைக்குச் சென்று வழக்கமான சேவைகளை பொதுமக்களுக்கு அளிக்கும்படி நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு கடந்த மாதம் பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்கு செவிசாய்க்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்."

# பட்டாச்சாரியா மனு நிராகரிப்பு!

ராவல்பிண்டி, பெப். 1

கிழக்குப்பாகிஸ்தானில் உளவுவேலை பார்த்ததாக பாகிஸ்தான் அரசாங்கத்தால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் இந்திய லெப்டினன்ட்கேர்ணல்பட்டாச்சாரியா, தம்மை விடுதலை செய்யும்படி விசேஷ அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை, நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

உளவு பார்த்த குற்றத்துக்காக கேர்ணல் பட்டாச்சாரியாவுக்கு பாகிஸ்தான் அரசாங்கம் அதிககாலம் சிறைத்தண்டனை விதித்திருந்தது. இந்தச் சிறைத்தண்டனை, பாகிஸ்தான் ஜனாதிபதி அயுப்கானின் வேண்டுகோளின்பேரில் குறைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவரது சிறைத்தண்டனை பலமுறை குறைக்கப்பட்டது கடைசியாக, கேர்ணல் பட்டாச்சாரியா விசேஷ அப்பில் நீதிமன்றத்தில் தமது அப்பீலைத் தாக்கல் செய்திருந்தார்.

கிழக்குப்பாகிஸ்தான் அதிகாரிகள் அத்துமீறிப் பிரவேசித்து, கேர்ணல் பட்டாச்சாரியாவை கிழக்குப் பாகிஸ்தான் எல்லைக்குள் கொண்டுசென்றதாக இந்தியா குற்றம் சாட்டியிருந்தது.

---

# தங்கக் கட்டுப்பாடு

கல்கத்தா, பெப். 1

நகைவியாபார, பொற்கொல்லர்கள் சங்கப் பிரதிநிதிகள் இன்று கல்கத்தாவில் கூடி தங்கக் கட்டுப்பாடு குறித்து ஆராய்ந்தனர். 14 கரட்டுக்கு மேலதிகமாக தங்க நகைகள் செய்யக்கூடாதென்று அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாட்டினால், ஒரு சிலர் மட்டுமே பாதிக்கப்படுவார்களென்றும் இது ஒரு பெரிய பிரச்னையல்லவென்றும் சங்கத் தலைவர் திரு. கோட்டா கூறினர்.

கூட்டத்தில் திரு. கோட்டா தொடர்ந்து பேசுகையில், தங்கக் கள்ளக் கடத்தலினால் வருடத்தில் சுமார் 50 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டமேற்படுகிறதென்றும் தங்க விலைகளைக் குறைப்பதன் மூலம், ஒரே விலையில் தங்கத்தை வைத்துக்கொள்வதுடன் கள்ளக் கடத்தலைத்யும் தடைசெய்யலாமென்றும் கூறினர்.

---

# பிரிட்டிஷ் பிரதமர் ரோமுக்குப் புறப்பட்டார்

## இத்தாலிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்

லண்டன், பெப். 1

பொதுச் சந்தை பிரச்னை சர்வதேச பிரச்னை பற்றி இத்தாலியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்பொருட்டு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் மாக்மில்லன் இன்று ரோமுக்குப் புறப்பட்டார்.

பொதுச் சந்தையில் பிரிட்டன் விரைவில் சேரவேண்டுமென்று இத்தாலி விரும்புவதால், இத்தாலிய தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினால் ஏதும் பலன் கிடைக்கலாம் என்ற நோக்கத்துடனேயே பிரிட்டிஷ் பிரதமர் இத்தாலி செல்வதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி திரு. கியூம் பிரபு தெரிவிக்கையில் பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வது சம்பந்தமாக கடைசியாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில், பிரான்ஸ் ஏமாற்றிவிட்டதென்றும், கடைசி நேரத்தில் அருமையானதொரு சந்தர்ப்பத்தை பிரான்ஸ் நிராகரித்துவிட்டதென்றும் கூறினர்.

## சீனவுடன்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ நிருபர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:–

'கொழும்பில் கூடிய ஆறு நாடுகள் தெரிவித்திருந்த யோசனைகளை பாரதம் முழுமையாக ஏற்றுக்கொண்டதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் பாரதத்தையும் பாராட்டுகிறேன். கொழும்பு யோசனைகளை எக்காரணம் கொண்டும் பிரிக்கக்கூடாது. சீன பிரிக்க முயற்சிக்கிறது. சீனவின் போக்கு கூடாது. இருந்தபோதிலும் கொழும்பு யோசனைகளை சீன ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது,"

## மைசூரில் 'யூரேனியம்'

புதுடில்லி, பெப். 1

மைசூர் ராஜ்யத்தில் 'யூரோமைட்' இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

---

# புருனேய் சம்பந்தமாக யுத்தம் மூளாது

## டாக்டர் சுபந்திரியோ நம்பிக்கை

புதுடில்லி, பெப். 1

புருனேய் சம்பந்தமாக யுத்தம் எதுவும் ஏற்படாதென்று புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ இன்று நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில் கூறினர்.

இந்தோனேஷியாவுக்கும் மலாயாவுக்குமிடையே கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் இதனால்போர்மூளக காரணம் எதுவுமில்லையென்றும், புருனேய் சம்பந்தமாக யுத்தம் ஏற்படாதென்று தாம் உறுதி கூறுவதாகவும் டாக்டர் சுபந்திரியோ கூறினர்.

இது சம்பந்தமாக டாக்டர் சுபந்திரியோ மேலும் தெரிவிக்கையில் இந்தோனேஷியா, புருனேயுக்கு பொருளாதார உதவிகள் அளிக்காவிட்டாலும் சுதந்திர இயக்கத்தை இந்தோனேஷியா ஆதரிப்பதென்ற கொள்கை சம்பந்தமான விஷயமே இவற்றிற்குக் காரணமென்றும் கூறினர்.

---

## வர்த்தக ஒப்பந்தம்

புதுடில்லி, பெப். 1

பாரதமும் ஈராக்கும் செய்துகொண்ட வர்த்தக ஒப்பந்தம் இம் மாதம் 18-ம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

---

## திங்களில் சந்திப்பு

புதுடில்லி, பெப். 1

புதுடில்லிக்கு விஜயம் செய்திருக்கும் செக்கோஸ்லாவெகியா வர்த்தக தூதுகோஷ்டி, சர்வேதேச வர்த்தக மந்திரி திரு. மனுபாய்ஷாவை திங்கட்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தும்.

# உதவித் திட்டம் நிறுத்தப்படுவது ஒத்திவைப்பு

கொழும்பு, வெள்ளி

அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே 'கணக்குத் தீர்வு' சம்பந்தமாக இப்பொழுது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளுக்கு இலங்கை அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்காவிட்டால், அமெரிக்க உதவித் திட்டம் நிறுத்தப்படும் என்று அமெரிக்க அரசாங்கம் முன்னர் தெரிவித்திருந்தது. இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருப்பதால், உதவித் திட்டம் நிறுத்தி வைப்பதை, அமெரிக்க அரசாங்கம் ஒத்திவைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## இறைச்சிக்கு எருமை?

கொழும்பு, வெள்ளி

வடமத்திய மாகாணத்திலிருந்து கொழும்புக்கு இறைச்சிக்காக எருமை மாடுகளைக் களவாகக் கடத்திச் செல்லும் ஒரு மோசடி நீண்ட காலமாக நடைபெற்றுவருகிறதெனப் பொலிசார் நம்பும்வகையில் ஒரு சம்பவம் சமீபத்தில் நடைபெற்றது.

எருமை மாடுகளை ஏற்றிச் சென்ற ஒரு மோட்டார் லொறியைப் பொலிசார் பின் தொடர்ந்து சென்றபோதே இது விஷயம கண்களுக்குத் தெரியவந்தது. மோட்டார் லொறிக்குள் பத்து எருமை மாடுகள் ஏற்றப்பட்டிருந்தன. ஆனால் லொறியிலிருந்த யாரிடமும் அதற்கான பர்மிட் இருக்கவில்லை.

## பிரிஜெட் பார்டற் விவாகரத்து செய்தார்

பாரிஸ், பெப். 1

பிரபல பிரஞ்சு நடிகையான பிரிஜெட் பார்டற் தமது இரண்டாவது கணவரான நடிகர் சாரியாரை விவாகரத்துச் செய்துள்ளார்.

பார்டற்றுக்கு வயது 28 சாரியருக்கு வயது 26. இவர்களது திருமணம் 1959-ம் வருடத்தில் நடைபெற்றது. இருவருக்கும் 3 வயதுடைய ஒரு ஆண் குழந்தையிருக்கிறது.

---

## நையர்ஸலாந்து சுதந்திரமடைகிறது

லண்டன், பெப். 1

நையர்ஸலாந்தின் முதலாவது பிரதமராக டாக்டர் பண்டா நியமிக்கப்பட்டுள்ளார். டாக்டர் பண்டா நையர்ஸலாந்தின் முதல் பிரதமராவதுடன், நையர்ஸலாந்து ராஜயம், அறுபது வருட பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இன்று சுதந்திரமடைகிறது.

நையர்ஸலாந்து ராஜ்யம், ரொடிஷிய சம்மேளனத்திலிருந்து பிரியும் நோக்கத்தை பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரால்ட் மாக்மில்லன் வரவேற்றுள்ளார் எனத்தெரிகிறது.


விரைவில் எதிர்பாருங்கள்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!



சிவாஜி கணேசன் - பத்மினி

மற்றும் பலர் நடிக்கும்

புனர்ஜென்மம்

திரைக்கதை-வசனம் ஸ்ரீதர் | டைரக்ஷன் ஆர்.எஸ். மணி | இசை டி. சலபதிர

இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (அம்பாறை) விஜயா (மட்டக்களப்பு)

எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி

மற்றும் பலர் நடித்த

ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன் | டைரக்ஷன் டி. யோகானந்த்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

நாகநந்தினி

மனோகரா (யாழ்ப்பாணம்)

எம். என். கண்ணப்பா, மாதுரிதேவி, வி. என். ஜானகி, நம்பியார், எஸ். பாலச்சந்தர்

மற்றும் பலர் நடித்த

தேவகி


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.